வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959
Reg. No. : P . 1632
விலை ரூ. 30/=

# ஈழநாடு
Eelanadu ඊළනාඩු




Email : news@eelanadu.lk | மலர் : 04 | 02.08.2023 புதன்கிழமை | இதழ் : 235 | பக்கங்கள் : 16

# ‘13’ ஐ நடைமுறைப்படுத்துமாறே ரணிலிடம் எடுத்துரைத்துள்ளோம்!

## தமிழ் எம்.பிக்களிடம் தெளிவுபடுத்தியது இந்தியா

கொழும்பு, ஓகஸ்ட் 02

இலங்கை - இந்திய ஒப்பந்தத்தை நடைமுறைப்படுத்த வேண்டும் எனவும், அதிலுள்ள அரசமைப்பின் 13 ஆவது திருத்தத்தை முழுமையாக அமுல்படுத்தவேண்டும் எனவும் இலங்கை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடம் இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி அறிவுறுத்தினார் என்று இந்தியத் தூதுவர் கோபால் பாக்லே, தமிழ் எம்.பிக்களிடம் நேற்று நேரில் தெரிவித்தார். 15

## தமிழ் தலைவர்களுடன் ஒன்றித்து பயணிக்கவே விரும்புகின்றோம்!

### ஜனாதிபதி ரணில் கூறுகின்றார்



கொழும்பு, ஓக. 02

“தமிழ்த் தலைவர்களுடன் நாம் ஒன்றிணைந்து பயணிக்கவே விரும்புகின்றோம். அவர்களும் மக்களின் நலன் கருதி அதனைக் கருத்தில்கொண்டு செயற்படுவார்கள் என்று எண்ணுகின்றேன்.”

- இவ்வாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியதாவது:-

ஜனாதிபதியால் மாத்திரம் அரசியல் தீர்வை வழங்கமுடியாது. அவரால் யோசனைகளை மாத்திரம் முன்வைக்க முடியும். சர்வ கட்சிகளைக் கொண்ட பாராளுமன்றம் தான் அரசியல் தீர்வு தொடர்பில் 15

## மனோ அணியை வெள்ளியன்று சந்திக்கின்றார் இந்தியத் தூதுவர்!

கொழும்பு, ஓக. 02

இலங்கைக்கான இந்தியத் தூதுவர் கோபால் பாக்லேவுக்கும் தமிழ் முற்போக்குக் கூட்டணிக்கும் இடையில் நாளைமறுதினம் வெள்ளிக்கிழமை மாலை கொழும்பில் சந்திப்பு நடைபெறவுள்ளது.

இந்தியத் தூதுவரின் அழைப்பை ஏற்று நிகழும் இந்தச் சந்திப்பில் தமிழ் முற்போக்குக் கூட்டணியின் அனைத்து பாராளுமன்ற உறுப்பினர்களும் கலந்துகொள்வார்கள் என்று கூட்டணியின் தலைவர் மனோ கணேசன் எம்.பி. தெரிவித்தார்.

இதேவேளை, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி பாராளுமன்ற உறுப்பினர்களை இந்தியத் தூதுவர் நேற்று முற்பகல் 10.30 மணியளவில் கொழும்பில் சந்தித்துப் பேச்சு நடத்தினார். (அ)

## அஸ்வெசும திட்டத்துக்கு தெரிவாகாத பயனாளர்களுக்கு தொடர்ந்து சமுர்த்தி

கொழும்பு, ஓக. 02

சமுர்த்தி கொடுப்பனவை பெறும் குடும்பங்களில் அஸ்வெசும திட்டத்திற்கு தெரிவு செய்யப்படாதவர்களுக்கு தொடர்ந்தும் சமுர்த்தி கொடுப்பனவை வழங்க அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.

தற்போது சமுர்த்தி கொடுப்பனவு கிடைக்கும் குடும்பங்களில் அஸ்வெசும திட்டத்திற்கு தகுதி பெறாத 3,93,097 குடும்பங்களுக்கு சமுர்த்தி கொடுப்பனவை தொடர்ந்து வழங்க ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க சமர்ப்பித்த அமைச்சரவைப் பத்திரத்திற்கு அங்கீகாரம் கிடைத்துள்ளதாக நிதி இராஜாங்க அமைச்சர் ஷெஹான் சேமசிங்க தெரிவித்துள்ளார்.

அஸ்வெசும கொடுப்பனவைப் பெற்றுக்கொள்ள தகுதி பெற்றவர்கள் விரைவாக தமது வங்கிக் கணக்கை திறக்குமாறு இராஜாங்க அமைச்சர் 15

## தமிழர்களின் இனப்பிரச்னைக்கு இலங்கைக்குள் தீர்வு வேண்டும்!

### வலியுறுத்துகிறார் மிலிந்த மொரகொட

புதுடில்லி, ஓக. 02

தமிழர் இனப்பிரச்னைக்கு இலங்கைக்குள் தீர்வு காணப்படவேண்டும் என்று இந்தியாவுக்கான இலங்கைத் தூதுவர் மிலிந்த மொரகொட தெரிவித்தார்.

பொருளாதார வளர்ச்சியில் இருந்து பயனடைவதற்கும் தற்போதைய பொருளாதார நெருக்கடியிலிருந்து மீண்டு வருவதற்கும் இது அவசியமானது என்று மொரகொட குறிப்பிட்டார். 15

## இந்திய முதலீட்டாளர்கள் வடக்குக்கு படையெடுப்பு!

யாழ்ப்பாணம், ஓக. 02

இந்திய முதலீட்டாளர் குழுவொன்று வடக்கு மாகாண ஆளுநர் திருமதி பி.எச்.எம்.சார்ள்ஸ் மற்றும் மாகாண அரச அதிகாரிகளைச் சந்தித்து மாகாணத்தில் பல்வேறு துறைகளில் முதலீட்டு வாய்ப்புகள் குறித்துக் கலந்துரையாடியுள்ளனர்.

யாழ்ப்பாணத்திலுள்ள இந்தியத் துணைத் தூதரகத்தால் இதற்கான ஒழுங்குகள் 15

## ‘13’குறித்து அடுத்த வாரம் ரணில் பாராளுமன்றத்தில் விசேட உரை

கொழும்பு, ஓக. 02

அரசியலமைப்பின் 13ஆவது திருத்தச்சட்டம் தொடர்பில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பாராளுமன்றத்தில் அடுத்த வாரம் விசேட உரையொன்றை எதிர்வரும் அமர்வில் ஆற்றவுள்ளார் என அறிய முடிகிறது.

அரசியலமைப்பின் 13ஆவது திருத்தச்சட்டத்தை அமுல்படுத்துவது குறித்து கடந்த வாரம் சர்வகட்சி மாநாடொன்றை ஜனாதிபதி நடத்தியிருந்தார்.

இதன்போது பொலிஸ் 15

## எந்தத் தேர்தலிலும் பெரமுன வெல்லும்

கொழும்பு, ஓக. 02

70 சதவீதத்துக்கும் அதிகமான வாக்காளர்களைக் கொண்டுள்ளதால் பொதுஜன பெரமுன எந்தத் தேர்தலிலும் வெற்றி பெறும் என முன்னாள் அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னான்டோ தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

பெரமுன உறுப்பினர்களால் 15

## 2 பில்லியன் ரூபா நிதியை கோரும் சுகாதார அமைச்சு

கொழும்பு, ஓக. 02

இலங்கை சுகாதார அமைச்சு அத்தியாவசிய மருந்துகளை கொள்வனவு செய்வதற்கு சுமார் 2 பில்லியன் ரூபாயை நிதியமைச்சிடம் கோர திட்டமிட்டுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

இந்த நிதியினால் சுமார் 200 வகையான அத்தியாவசிய மருந்துகளை கொள்வனவு செய்ய 15

## சுற்றுலாத்துறையை ஊக்குவிக்க இரவுநேரப் பொருளாதார முறை

### டயானா கமகே ஆலோசனை

கொழும்பு, ஓக. 02

சுற்றுலாத்துறையை மேம்படுத்தும் வகையில், இரவு நேர பொருளாதார முறையை பின்பற்றவேண்டும். ஒருவரின் வாழ்க்கையை சுதந்திரமாக அனுபவிக்க தேவையான வசதிகளை வழங்கும் இடமே சுற்றுலாத் தலமாகும். எனவே இரவு 10 மணிக்கு சுற்றுலா தலத்தை மூடினால் சுற்றுலாப் பயணிகள் 15

# இப்படியும் நடக்கிறது

தமிழ் மக்களால் தெரிவுசெய்யப்பட்ட மக்கள் பிரதிநிதிகள் இப்போதெல்லாம் ஒருவரையொருவர் விமர்சிப்பதிலேயே காலத்தை கடத்துகின்றனர்.

ஒருவர் ஊடகர்களைச் சந்தித்து மற்றவர் பற்றி பேசினால், மறுநாள் மற்றவர் இவரைப்பற்றி புகார் சொல்வதே நடந்துகொண்டிருக்கின்றது.

அதற்கு இந்த பதின்மூன்றாவது திருத்தச்சட்டமும் அவர்களுக்கு நன்றாகவே உதவிவருகின்றது.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, தமிழ் கட்சிகளை பேச்சுக்கு அழைக்கின்றபோது, அந்தப் பேச்சுக்களில் பதின்மூன்றை முழுமையாக அமுல்படுத்த வேண்டும், பொலிஸ் காணி அதிகாரம் மாத்திரமன்றி, பதின்மூன்றிலிருந்து எடுக்கப்பட்ட அதிகாரங்களையும் மீண்டும் வழங்க வேண்டும் என்று கோரிக்கை வைக்கின்ற தமிழ் கட்சிகள், கடைசியாக நடைபெற்ற அனைத்துக்கட்சி கூட்டத்தில் இருப்பது இருக்கட்டும் முதலில் மாகாணசபைகளுக்கான தேர்தலை நடத்துங்கள் என்று கோரிக்கை வைத்தன.

கடைசியாக நடைபெற்ற தமிழ்க்கட்சிகளுடனான பேச்சுக்களில் பொலிஸ் அதிகாரத்தை தவிர்த்து மற்றைய விடயங்களை அமுல்செய்ய தயாராக இருப்பதாக ஜனாதிபதி ரணில் கூறியபோது, அதனை ஏற்றுக்கொள்ள முடியாது என்று சொன்ன தமிழரசுக்கட்சி, பின்னர் நடைபெற்ற அனைத்துக் கட்சிக் கூட்டத்தில், பதின்மூன்றை முழுமையாக அமுல்படுத்துவதை பின்னர் பார்ப்போம், அதற்கு முன்னர் மாகாணசபைகள் இயங்கிய போது எத்தகைய அதிகாரங்களுடன் இயங்கியதோ அதே போன்று இப்போதும் இயங்கும் வகையில் உடனேயே மாகாணசபைகளுக்கான தேர்தல்கள் நடத்தப்படவேண்டும் என்று கோரிக்கை வைத்தது.

(அப்படி கோரிக்கை வைத்து விட்டு யாழ்ப்பாணம் வந்து பதின்மூன்றை ஏற்றுக்கொள்ள முடியாது, சமஷ்டிதான் எமது கொள்கை என்று கதையளந்தது வேறு விடயம்.)

மாகாணசபை தேர்தலை வைக்கக் கோரிய, அந்த திடீர் மாற்றம் எதற்காக என்பதற்கு ஆராய்ச்சி தேவையில்லை.

நல்லாட்சி அரசின் காலத்தில் ரணில் விக்கிரமசிங்கவிற்கு விருப்பமானவற்றைச் செய்வதில் எப்படி கரிசனை காட்டினார்களோ அதே போல இப்போது சஜித் பிரேமதாசாவின் விருப்பங்களை நிறைவேற்ற முயற்சி செய்கிறார்களா என்று கேட்காமல் இருக்க முடியவில்லை.

காரணம், அந்தக் கூட்டத்தின் ஆரம்பத்தில் பேசிய சஜித் பிரேமதாச, முதலில் மாகாணசபைகளுக்கு தேர்தல்களை வையுங்கள் என்றே கோரிக்கை விடுத்தார். போதாக்குறைக்கு அவரைத் தொடர்ந்து பேசிய லக்ஸ்மன் கிரியெல்லவும் அதே கோரிக்கையையே முன்வைத்தார்.

முன்னதாக தமிழ் கட்சிகளுடன் நடந்த கூட்டத்தில் பொலிஸ் அதிகாரம் தரமுடியாது என்று ரணில் கூறியபோது, அதனை ஏற்றுக் கொள்ளமுடியாது என்று கூறிய சுமந்திரன், ஒரு சில தினங்களிலேயே அதிகாரங்களை தராவிட்டாலும் பரவாயில்லை, தேர்தலை வையுங்கள் என்று கோரியது தமிழ் மக்களுக்கு மாத்திரமல்ல, ரணிலுக்கும் சந்தேகத்தை ஏற்படுத்தியதோ தெரியவில்லை.

அதனால்தானோ என்னவோ, பொலிஸ் அதிகாரம் என்பது ஏற்கனவே பதின்மூன்றில் இருக்கின்ற ஒன்று, அதனை நீக்காமல் தேர்தலை நடத்தினால், தெற்கில் சஜித் தரப்பும் ஜே.வி.பி. தரப்பும், தனக்கு எதிராக பிரசாரத்தை மேற்கொள்ளும் என்றும், அதாவது பொலிஸ் அதிகாரத்துடன் கூடிய மாகாணசபைகளுக்கான தேர்தல்களே நடக்கின்றன என்று பிரசாரம் செய்வார்கள் என்றும் அதனால் பொலிஸ் அதி காரம் பதின்மூன்றாவது திருத்தத்தில் இருக்கின்றபோது தேர்தலை நடத்த முடியாது என்றும் திட்டவட்டமாக அறிவித்துவிட்டு கூட்டத்தை அன்று நிறைவுசெய்தார்.

அந்தக் கூட்டத்திற்கு பின்னர் தமிழ் மக்கள் கூட்டணியின் தலைவர் சி.வி.விக்னேஸ்வரனையும், பதின்மூன்றுக்கு ஆதரவாக பல்வேறு முயற்சிகளை எடுத்துவரும் தமிழர் மகாசபைத் தலைவர் எந்திரி விக்னேஸ்வரனையும் தனியாக சந்தித்து பேசிய ஜனாதிபதி ரணில், திட்டவட்டமாக அடுத்து ஜனாதிபதி தேர்தலும் அதனையடுத்து பாராளுமன்ற தேர்தலையும் நடத்திய பின்னர்தான் மாகாணசபைகளுக்கான தேர்தலை நடத்துவேன் என்று தெரிவித்திருக்கிறார்.

இந்தத் தகவலை பின்னர் விக்னேஸ்வரன் வெளியிட்டிருந்தார்.

ஆக, மாகாணசபைகளுக்கான தேர்தல் அடுத்த வருடமும் இல்லை என்பதையே அவர் தெரிவித்திருப்பதாக உணரமுடிகின்றது.

இதிலிருந்து ஒரு விடயம் மட்டும் தெளிவாகியிருக்கின்றது. ஜனாதிபதி தேர்தல்தான் முதலில் நடக்கவிருக்கின்றது. இந்த ஜனாதிபதி தேர்தலில் தனக்கு பாதகமான எந்த விடயத்தையும் ரணில் விக்கிரமசிங்க செய்யப்போவதில்லை. தனக்கு சாதகமான விடயங்களைச் செய்ய அவர் முனைந்தால், அதற்காக இருக்கின்ற அதிகாரங்களிலும் எதனை எடுக்கலாம் என்றே அவர் சிந்திக்கக்கூடும். பொலிஸ் அதிகாரங்களை தரப்போவதில்லை என்று அவர் திட்டவட்டமாக கூறிய காணொலியை சிங்கள மக்கள் மத்தியில் பரப்பி, ஏற்கனவே அவர் பிரசாரத்தை தொடங்கியும் விட்டார்.

இந்த நிலையில் தமிழ் கட்சிகள் இனியும் பேச்சுவார்த்தை என்றபெயரில் நடக்கும் கூட்டங்களில் காலம் கடத்த வேண்டுமா? என்பதை ஒன்றுக்கு பலதடவை சிந்தித்து முடிவெடுக்கவேண்டும்.

பொலிஸ் அதிகாரத்திற்கு பதிலாக ஆயுதம் இல்லாத பொலிஸ் தரலாம் என்பதுபோன்ற கோரிக்கைகள், ரணிலுக்கு உதவி செய்யுமே தவிர தமிழ் மக்களுக்கு எந்த வகையிலும் உதவப்போவதில்லை.

இந்தச் செய்தியைப் படித்து விட்டு எமது காட்டூனிஸ்ட் அப்புக்குட்டி அண்ணை எழுதி அனுப்பிய தகவல் ஒன்றுதான் ஞாபகத்திற்கு வருகின்றது.

பிறேக்கிங் நியூஸ்:

"யாழ்ப்பாணத்தில் ஒரு வீட்டுக்குள் நுழைந்து பலரையும் வெட்டி விட்டு வெளியேறிய வாள்வெட்டுக் குழு ஒன்றை, கொட்டன் தடிகளுடன் சென்ற மாகாண பொலிஸ் சுற்றிவளைத்து கைதுசெய்தது".

**- ஊர்க்குருவி.**

# கட்டுநாயக்க விமான நிலையத்துக்குள் கப்பம் பெறும் குழு குறித்து விசாரணை

கொழும்பு, ஓக. 02

வெளிநாடுகளுக்கு செல்வதற்காக விமான நிலையத்திற்கு செல்லும் இளைஞர்களை அச்சுறுத்தி கப்பம் பெற்று வரும் கட்டுநாயக்க விமான நிலையத்தின் குடிவரவு மற்றும் குடியகல்வு அதிகாரி உள்ளிட்ட குழுவினர் தொடர்பில் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இந்த குழுவினரின் செயல் காரணமாகவே அண்மையில் தென் கொரியா சென்ற தொழிலாளர்களின் விமானப் பயணம் தாமதமானதாகக் கூறப்படுகிறது.

இந்த குழுவினர் ஒரு பயணியிடம் 100 முதல் 200 டொலர்கள் வரை கப்பமாக பெற்றுக்கொள்வதாக தெரிவிக்கப்படுகிறது.

சுற்றுலா விசாவில் வெளிநாடு செல்லும் இளைஞர்களை இலக்கு வைத்தே இவர்கள் கப்பம் பெற்று வருவதாக தெரியவருகிறது. (அ)

# நிமல் லான்சாவின் புதிய கட்சிக்கு ஒத்துழைப்பு வழங்கவேண்டாம்!

## ஜனாதிபதியிடம் கோரினார் பஸில்

கொழும்பு, ஓக. 02

பாராளுமன்ற உறுப்பினர் நிமல் லான்சா உட்பட பொதுஜன பெரமுனவில் இருந்து விலகி சுயாதீனமாக இயங்கும் பாராளுமன்ற உறுப்பினர்கள் இணைந்து ஆரம்பித்துள்ள அரசியல் கூட்டணிக்கு ஒத்துழைப்பு வழங்கவேண்டாம் என முன்னாள் அமைச்சர் பசில் ராஜபக்ஷ, ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

இப்படியான அரசியல் கூட்டணி ஆரம்பிக்கப்படுவதால், பொதுஜன பெரமுனவுக்கு பாதிப்பு ஏற்படும் என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

மேலும் இந்த கூட்டணி காரணமாக பொதுஜன பெரமுனவின் பாராளுமன்ற உறுப்பினர்கள் தனக்கு பெரும் அழுத்தங்களை கொடுத்து வருவதாகவும் பசில் ராஜபக்ஷ ஜனாதிபதியிடம் கூறியுள்ளார்.

இந்த விடயம் தொடர்பாக பசில் ராஜபக்ஷ கடந்த ஞாயிற்றுக்கிழமை இரவு ஜனாதிபதியை சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தியுள்ளார்.

நிமல் லன்சா உள்ளிட்ட பாராளுமன்ற உறுப்பினர்களும் நேற்றுமுன்தினம் முற்பகல் ஜனாதிபதியை சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தியுள்ளனர்.

அப்போது பொதுஜன பெரமுனவின் முடிவு குறித்து ஜனாதிபதி, நிமல் லான்சாவுக்கு தெரியப்படுத்தியுள்ளார்.

எது எப்படி இருந்த போதிலும் பொதுஜன பெரமுனவுக்கு எதிராக ஆரம்பிக்கப்பட்டுள்ள புதிய அரசியல் கூட்டணியின் அலுவலகம் ராஜகிரிய லேக் ட்ரைவ் பிரதேசத்தில் திறக்கப்பட்டுள்ளது.

இதனையடுத்து அதனை சீர்குலைக்க ராஜபக்ச குடும்பத்தின் முக்கிஸ்தர்கள் தீவிரமான நடவடிக்கைகளில் இறங்கியுள்ளதாகக் கூறப்படுகிறது.

முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவை சந்தித்துள்ள பாராளுமன்ற உறுப்பினர்கள் நாமல் ராஜபக்ஷ மற்றும் நிபுண ரணவக்க ஆகியோர், புதிய அரசியல் கூட்டணிக்கு ஆதரவளித்து வரும் முன்னாள் ஜனாதிபதியின் செயலாளர் சுகீஷ்வர பண்டாரவை அதில் இருந்து விலகுமாறு கோரியுள்ளனர்.

எனினும் முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய இந்த கோரிக்கையை நிராகரித்துள்ளார்.

இதனிடையே புதிய கூட்டணியின் பாராளுமன்ற உறுப்பினர்கள், கொழும்பில் அரசியல் கட்சிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தியுள்ளனர்.

பாராளுமன்ற உறுப்பினர்களான அனுர பிரியதர்ஷன யாப்பா, சுசில் பிரேமஜயந்த, லசந்த அழகியவண்ண, நிமல் லான்சா, துமிந்த திஸாநாயக்க, நளின் பெர்னாண்டோ, மகிந்த அமரவீர, பிரியங்கர ஜயரத்ன ஆகியோர் இந்த பேச்சுவார்த்தையில் கலந்துகொண்டுள்ளனர்.

அதேவேளை முன்னாள் ஜனாதிபதி கோட்டாபயவின் செயலாளரான சுகீஷ்வர பண்டார, எதிர்வரும் பொதுத் தேர்தலில் கொழும்பு மாவட்டத்தில் போட்டியிட திட்டமிட்டுள்ளார்.

இவ்வாறான நிலைமையில், நிமல் லான்சா தலைமையிலான புதிய கூட்டணி எதிர்வரும் ஜனவரி மாதம் 19 ஆம் திகதி மிகப் பெரிய பொதுக்கூட்டம் ஒன்றை நடத்த தயாராகி வருகிறது. (அ)

# திருமணத்துக்கு புறம்பான உறவுகளால் ஏற்படும் குடும்பச் சச்சரவுகள் அதிகரிப்பு

கொழும்பு, ஓக. 02

திருமணத்திற்கு புறம்பான உறவுகள் காரணமாக ஏற்படும் குடும்ப சச்சரவுகள் தொடர்பாக கடந்த ஆண்டு 9 ஆயிரத்து 636 முறைப்பாடுகள் பதிவாகியுள்ளதாக இலங்கை பொலிஸ் திணைக்களத்தின் 2022 ஆம் ஆண்டுக்கான அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த 2021 ஆம் ஆண்டு திருமணத்திற்கு புறம்பான உறவுகள் காரணமாக ஏற்பட்ட பிரச்னைகள் தொடர்பில் 9 ஆயிரத்து 250 முறைப்பாடுகள் பதிவாகியுள்ளன.

இதனடிப்படையில் 2021 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும் போது, 2022 ஆம் ஆண்டில் திருமணத்திற்கு புறம்பான உறவுகளால், ஏற்பட்ட குடும்ப சச்சரவுகள் 4 வீதமாக அதிகரித்துள்ளது.

அத்துடன் 2022 ஆம் ஆண்டில் குடும்ப சச்சரவுகள் சம்பந்தமாக ஒரு லட்சத்து 11 ஆயிரத்து 709 முறைப்பாடுகள் பதிவு செய்யப்பட்டுள்ளன.

2021 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும்போது இது 6 சத வீத அதிகரிப்பு எனவும் அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

2021 ஆம் ஆண்டு குடும்பங்களில் ஏற்படும் சச்சரவுகள் தொடர்பாக ஒரு லட்சத்து 5 ஆயிரத்து 469 முறைப்பாடுகள் பதிவு செய்யப்பட்டுள்ளன.

வீடுகளில் நடக்கும் வன்முறைகள் சம்பந்தமான முறைப்பாடுகள் 2021 மற்றும் 2022 ஆம் ஆண்டுகளில் அதிகரித்துள்ளன.

2022 ஆம் ஆண்டில் வீடுகளில் நடக்கும் வன்முறை சம்பவங்கள் தொடர்பாக 22 ஆயிரத்து 358 முறைப்பாடுகள் பதிவாகி இருப்பதாக 2022 ஆம் ஆண்டுக்கான பொலிஸ் திணைக்களத்தின் அறிக்கையில் கூறப்பட்டுள்ளது. (அ)

# ஜூலையில் 6.3 வீதமாக குறைந்த பணவீக்கம்!

கொழும்பு, ஓக. 02

ஜூலை மாதத்தில் இலங்கையின் பணவீக்கம் 6.3 வீதமாக குறைந்துள்ளதாக சனத்தொகை மற்றும் புள்ளிவிவர திணைக்களம் அறிவித்துள்ளது.

கடந்த ஜூன் மாதம் இலங்கையில் பணவீக்கம் 12 வீதமாக பதிவாகியிருந்தது.

ஜூன் மாதத்தில் 4.1 வீதமாக இருந்த உணவு வகை பணவீக்கம் ஜூலையில் 1.4 வீதமாக குறைந்துள்ளதாகவும் புள்ளிவிவர திணைக்களம் தெரிவித்துள்ளது. (அ)

ஈழநாடு
Eelanadu
02.08.2023 புதன்கிழமை
சோபகிருது வருடம், ஆடி 17

**“ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்”**
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 205 2300

# அரச - ஆதரவு தமிழ் கட்சிகளின் கவனத்திற்கு

தமிழ் தேசிய தரப்புக்களுக்கு வெளியில், அரசாங்கத்தின் அங்கமாக இருக்கும் தமிழ் கட்சிகள், அரசியல் தீர்வு தொடர்பில் எவ்வாறான நிலைப்பாட்டைக் கொண்டிருக்கின்றன? இதில் பிரதானமானவர்கள் டக்ளஸ் தேவானந்தா தலைமையிலான ஈழ மக்கள் ஜனநாயக கட்சி மற்றும் சிவனேசதுரை சந்திரகாந்தன் தலைமையிலான தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியினர் ஆவர். இவர்கள் பேச்சுவார்த்தையில் பங்குகொள்கின்றனர். ஆனால் அரசியல் தீர்வு தொடர்பான சர்ச்சைகளுக்கும் தங்களுக்கும் சம்பந்தமில்லாதவர்கள் போல் நடந்துகொள்கின்றனர். அவ்வப்போது, தமிழ் தேசிய கட்சிகளை குற்றம்சாட்டுவதுடன் தங்களின் ஈடுபாட்டை துண்டித்துக்கொள்கின்றனர். இது சரியானதா?

குறிப்பாக டக்ளஸ் தேவானந்தா, மத்தியில் கூட்டாட்சி மாநிலத்தில் சுயாட்சி – என்னும் மந்திரமொன்றை தொடர்ந்தும் உச்சரித்து வந்திருக்கின்றார். மாகாண சபையை பயன்படுத்த முடியுமென்றும் அவர் கூறி வந்திருக்கின்றார். அண்மைக்காலத்தில், சந்திரகாந்தன் தலைமையிலான கட்சியும், அரசமைப்பிலுள்ள 13ஆவது திருத்தச்சட்டத்தை அமுல்படுத்தும் விடயத்தில் ஆதரவான நிலைப்பாட்டை வெளிப்படுத்தி வருகின்றது. இது தொடர்பான அரசியல் கலந்துரையாடல்களில் பங்குகொள்கின்றனர். ஆனால் இவர்களின் ஈடுபாடு உண்மையானதுதானா என்னும் கேள்வி எழுகின்றது. ஏனெனில் 13வது திருத்தச்சட்டத்தை அமுல்படுத்தும் விடயத்தில் இவர்களது பங்களிப்பு அர்ப்பணிப்புமிக்கதாக தெரியவில்லை. அரசாங்கத்தில் அமைச்சர்களாக இருப்பதை கடந்து, அரசியல் தீர்வு விடயத்தில் அர்ப்பணிப்பு மிக்க ஈடுபாட்டை இவர்கள் வெளிப்படுத்தவில்லை.

ரணில் விக்கிரமசிங்க, 13ஆவது திருத்தச்சட்டத்தை முழுமையமாக அமுல்படுத்தப் போவதாக கூறியிருந்தார். தற்போது, பொலிஸ் அதிகாரத்தை வழங்க முடியாதென்று கூறுகின்றார். அதே வேளை, 13இலிருந்து பறிக்கப்பட்ட அதிகாரங்களை மீளவும் பெறும் விடயத்தில், அனைத்துக் கட்சிகளதும் ஆதரவு தேவையென்கின்றார். இது தொடர்பில் அரசாங்கத்திலுள்ள தமிழ் கட்சிகளின் நிலைப்பாடு என்ன?

எதிர்ப்பு அரசியலில் பயனில்லையென்னும் நியாயத்தின் அடிப்படையில்தான், இவ்வாறான தமிழ் கட்சிகள் அரசாங்கத்துடன் இணைந்து செயற்பட்டு வருகின்றனர். அவர்கள் தங்களின் இணைவு தமிழ் மக்களுக்கானதென்றும் கூறிவந்திருக்கின்றனர். அது உண்மையாயின் அவர்கள் தங்களின் மக்களுக்கான அர்ப்பணிப்பை நிரூபித்தாக வேண்டும். அரசாங்கத்தின் செயல்பாடுகளை கண்மூடித்தனமாக ஆதரிப்பது ஒரு போதும் மக்களுக்கான அரசியலாக இருக்க முடியாது.

எனவே, ரணில் விக்கிரமசிங்க கூறிவரும் விடயங்கள் தொடர்பில் அரசாங்க தமிழ் கட்சிகள் தங்களின் நிலைப்பாட்டை பகிரங்கப்படுத்த வேண்டும். பொலிஸ் அதிகாரம் அடங்கலாக, 13ஆவது திருத்தச்சட்டம் அமுல்படுத்தப்படவில்லையாயின், அரசாங்கத்திலிருந்து வெளியேறும் முடிவை அறிவிக்க வேண்டும். அமைச்சுப் பொறுப்புக்களுக்காக தமிழ் மக்களின் நலன்களை தாரைவார்க்க முடியாதென்பதை, டக்ளஸ் தேவானந்தா மற்றும் சந்திரகாந்தன் போன்றவர்கள் உறுதிப்படுத்த வேண்டும்.

வெறுமனே தமிழ் தேசிய கட்சிகளை விமர்சிப்பதால், தங்களை சிறந்தவர்களாக காண்பிக்கும் அரசியல் அர்த்தமற்றது. ஏனெனில், 13ஆவது திருத்தச்சட்ட விடயத்தில் கூட, அரசாங்கம் முன்னோக்கி பயணிக்க விரும்பவில்லையாயின், அவ்வாறானதொரு அரசாங்கத்தின் அங்கமாக இருப்பது, அரசியல்ரீதியில் பெறுமதியற்றது. அது முற்றிலும் சுயநலன் சார்ந்தது. எனவே பொலிஸ் அதிகாரம் உள்ளடங்கலான 13ஆவது திருத்தச்சட்டத்தை அமுல்படுத்த வேண்டியது, அரசாங்கத்தின் கடப்பாடாகும். இதில் எந்தவிதமான விட்டுக்கொடுப்புக்களுக்கும் இடமில்லையென்பதை, மேற்படி தமிழ் கட்சிகள் வலியுறுத்த வேண்டும். இதற்கு அரசாங்கம் இணங்கவில்லையாயின் அரசாங்கத்திலிருந்து வெளியேறுவதன் மூலம், தங்களின் எதிர்ப்பை பதிவுசெய்ய வேண்டும்.

# சுகாதாரத்துறையின் முறைமைகளை மீளாய்வுக்குட்படுத்த ஆளுநர் பணிப்பு

*வடமராட்சி, ஒக. 02*

*வடக்கு மாகாணத்தில் சுகாதாரத் துறை முறைமைகள் பற்றிய கரிசனைகள் தொடர்பில், வடக்கு மாகாண ஆளுநரின் தலைமையில் வடக்கு மாகாண பிரதம செயலாளர், சுகாதார அமைச்சு செயலாளர், மாகாண சுகாதாரப் பணிப்பாளர், பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர்கள், மற்றும் வைத்திய அதிகாரிகளின் பங்கு பற்றுதலுடன் கலந்துரையாடப்பட்டது.*

*சேவை நாடுவோருக்கான சிகிச்சை, முகாமை மற்றும் புனர்வாழ்வு என்ற விடயங்கள் சுகாதார சேவை நிலையங்களில் ஒரே விதமாக நோக்கப்படலாகாது என்றும் அவை வெவ்வேறான முறைமைகள் ஊடாக அணுகவேண்டியவை என்பதை வலியுறுத்துவதாக ஆளுநர் தெரிவித்தார்.*

*வைத்தியர்களின் விடுப்பு நேர பதிலீடு, உணவு பாதுகாப்பு, வெளிநோயாளிகள் முறையாக மருந்துகளை பெற்றுக் கொண்டு அதனை கிரமமாக உபயோகிப்பதற்கான கண்காணிப்பு, அவசர அம்புலன்ஸ் வண்டிகளின் பராமரிப்பு, சுகாதார சேவைப் பணிமனைகளின் ஊடாக வழங்கப்படும் சேவைகள், உள்ளூராட்சி மன்ற சேவைகளில் சுகாதார சேவை பணிமனைகளின் காத்திரமான ஈடுபாடு என்பன எவ்வளவு வினைத்திறனாக நடைபெறுகின்றது என்பது பற்றியும் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர்களிடம் ஆளுநர் கேட்டறிந்ததுடன் அந்த முறைமைகள் அடிக்கடி மீளாய்வுக்குட்படுத்தி, பொது மக்களுக்கான சேவைகளை வினைத்திறனாக வழங்க வேண்டும் - என்றார்.*

*வடக்கு மாகாண பிரதம செயலாளர், தூர மற்றும் கஷ்டப் பிரதேசங்களில் நிலவும் வெற்றிடங்களுக்கு வைத்தியர்கள் மற்றும் ஊழியர்களை நியமனம் செய்ய நடவடிக்கைகள் படிப்படியாக எடுக்கப்படும் என்றார்.*

*பாடசாலைகளில் சுகாதார நிலைமைகள் பற்றிக் கேட்டறிந்த ஆளுநர், அதிகாரிகள் பாடசாலைகளில் குடிதண்ணீர், சுகாதாரம், சுத்தம், ஆரோக்கியம் என்பவற்றில் அதிக கரிசனை கொள்ள வேண்டும் என்றும் கூறினர். மேலும் பாடசாலை மாணவர்களுக்கு இன்றைய போட்டிக்கல்வி முறை உளவியல் ரீதியான பாதிப்புகளை உருவாக்குவது பற்றியும் ஆளுநருடன் கலந்துரையாடினர். ஆசிரியர்கள் மற்றும் அதிபர்கள் பிள்ளைகளின் ஆரோக்கியம் தொடர்பாக அறிந்து கொள்வதற்குரிய முறைமைகளை உருவாக்க வேண்டும் என்பது பற்றியும் கலந்துரையாடப்பட்டது.*

*பொதுமக்களின் சுகாதாரம் தொடர்பான பிரச்னைகளுக்கு வெவ்வேறு தூறையினரும் இணைந்து செயற்பட்டு தீர்வுகளைக் காண வேண்டியதன் அவசியத்தையும் ஆளுநர் எடுத்துரைத்திருந்தார்.*

*(அ-02)*

# சிறுப்பிட்டியில் குங்கிலியக்கலய நாயனார் விழா

*யாழ்ப்பாணம், ஒக. 02*

*சைவ வாழ்வியலில் பெரிய புராணம் பெறும் முக்கியத்துவம் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தும் முகமகாச் சிவஸ்ரீ. பால.திருகுணானந்தக் குருக்கள் அவர்கள் நடாத்தும் வாராந்தப் பெரியபுராணச் சிறப்புச் சொற்பொழிவும், மாதத்தோறும் நாயன்மார் குருபூஜை விழா தொடர் 05*

*குங்கிலியக்கலய நாயனார் விழா சிறுப்பிட்டி மேற்கு அருள்மிகு ஸ்ரீ நாக தம்பிரான் ஆலயப் பிரதான மண்டபத்தில் 06 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை*

*காலை 9.00 மணிக்குச் சிவநெறிப் பிரகாசர் சமய ஜோதி கதிர்காமன் நிஜலிங்கம் அவர்களின் ஒழுங்கமைப்பில் இடம்பெறவுள்ள நிகழ்வில் ஆன்மிகவிருந்தினராக யாழ்ப்பாணம் தேசிய கல்வியற் கல்லூரி சிரேஸ்ட விரிவுரையாளர் கலாநிதி பா. தனபாலன் கலத்து சிறப்பிக்கவுள்ளார்.*

*சேக்கிழார் பெருமான் , குங்கிலியக்கலய நாயனார் குருபூஜையைத் தொடர்த்து மாணவர்களின் கலை நிகழ்வுகள் இடம்பெறவுள்ளது. அதனையடுத்து , ‘மனையாளின் மாங்கள நாணை விற்று திருத்தொண்டு அருளிய நாயனார்’ என்னும் விடயப் பொருளில் இளம்சைவப் புலவர் க. கயிலைவாசன் அவர்களின் சொற்பொழிவும் , சொற்பொழிவில் இருந்து மாணவர்களிடம் வினாக்கள் தொடுக்கப் பட்டுப் பாராட்டுப் பரிசில்கள் வழங்கப்படும். அதனை அடுந்து ஆன்மிகவிருத்தினர் உரையும்*

*குருபூஜையை முன்னிட்டு மாணவர்களிடம் நடத்தப்பட்ட வினாடி வினாப் போட்டியில் வெற்றியீட்டிய மாணவர்களுக்குப் பாரட்டுப் பரிசில்கள் வழங்கப்படவுள்ளன.*

# நீர்வேலியில் சொற்பொழிவு

*யாழ்ப்பாணம், ஒக. 02*

*நீர்வேலி அருள்மிகு கந்தசுவாமி தேவஸ்தானத்தில் நடத்தும் வாராந்தச் சுக்கிரவாரச் சிறப்புச்சொற்பொழிவு ஆலய சண்முக விலாச மண்டபத்தில் நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை மாலை 5.00 மணிக்கு சிவநெறிப் பிரகாசர், சமயஜோதி கதிர்காமன் நிஜலிங்கத்தின் ஒழுங்கமைப்பில் இடம்பெறவுள்ளது.*

*பரிபாலன சபைத் தலைவர் த.சோதிலிங்கத்தின் தமையுரையினை தொடர்ந்து சிறப்புச்சொற்பொழிவினை இறைபணிச்செல்வி , கலாவித்தகர் திருமதி மா. அனந்தலெச்சுமி அவர்கள் ‘நாம மகிமை’ என்னும் விடயப் பொருளில் சிறப்புச்சொற்பொழிவும், சொற்பொழிவில் இருந்து மாணவர்களிடம் வினாக்கள் தொடுக்கப்பட்டுப் பாராட்டுப் பரிசில்கள் வழங்கப்படவுள்ளது. (அ)*

## அப்புக்குட்டி அண்ணையின் ‘டவுட்’



ஈழநாடு

ஓகஸ்ட் - 02 புதன்கிழமை
சோபகிருது வருடம் - ஆடி 17
நல்ல நேரம் : 09.00 - 10.30
ராகு காலம் : 12.00 - 01.30
திதி : பிரதமை




**மேடம்**
சொன்ன சொல்லை காப்பாற்ற துடிப்புடன் செயல்பட தொடங்குவீர்கள். வியாபாரத்தில் பழைய வாடிக்கையாளர்கள் உங்களை தேடி வருவார்கள். உங்கள் கை ஓங்கும். சாதிக்கும் நாள்.

**இடபம்**
குடும்பத்தில் சந்தோஷம் நிலைக்கும். எதிர்பார்த்த தொகை கைக்கு வரும். வியாபாரத்தில் நெளிவு சுளிவுகளை கற்றுக் கொள்வீர்கள். புதிய மாற்றம் ஏற்படும் நாள்.

**மிதுனம்**
சந்திராஷ்டமம் இருப்பதால் சிக்கனமாக இருக்க வேண்டும் என்று நினைத்தாலும் அத்தியாவசிய செலவுகள் அதிகரிக்கும். எச்சரிக்கையுடன் செயல்பட வேண்டிய நாள்.

**கடகம்**
தன் பலம் பலவீனத்தை உணர்வீர்கள். பிள்ளைகள் மனைவி வழியில் ஒத்துழைப்பு அதிகரிக்கும். உத்தியோகத்தில் சக ஊழியர்கள் ஆதரிப்பார்கள். எதிர்பாராத நன்மை கிட்டும் நாள்.

**சிம்மம்**
கனிவாகப் பேசி காரியம் சாதிப்பீர்கள். வியாபாரத்தில் அதிரடியான திட்டங்கள் தீட்டுவீர்கள். உத்தியோகத்தில் சில நுணுக்கங்களை கற்றுக் கொள்வீர்கள். வெற்றி பெரும் நாள்.

**கன்னி**
புதிய திட்டங்கள் நிறைவேறும். பிள்ளைகளின் வருங்காலத் திட்டத்தில் ஒன்று நிறைவேறும். வியாபாரத்தில் புது தொடர்பு கிடைக்கும். திருப்தி உண்டாகும். கனவு நனவாகும் நாள்.

**துலாம்**
எதிர்ப்புகள் அடங்கும். தாய்வழி உறவினருடன் கருத்து வேறுபாடுகள் வந்து நீங்கும். சக ஊழியர்கள் உங்கள் வேலைகளை பகிர்ந்து கொள்வார்கள். தேவைகள் பூர்த்தியாகும் நாள்.

**விருட்சிகம்**
குடும்பத்தில் உங்கள் வார்த்தைக்கு மதிப்பு கூடும். வியாபாரத்தில் புது யுக்திகளை கையாளுவீர்கள். அதிகாரிகள் முக்கியத்துவம் தருவார்கள். மாறுபட்ட அணுகுமுறையால் முன்னேறும் நாள்.

**தனுசு**
கணவன்-மனைவிக்குள் அன்யோனியம் பிறக்கும். வியாபாரத்தில் வேலையைாட்களின் ஆதரவு கிட்டும். உத்தியோகத்தில் முக்கிய முடிவுகளை எடுப்பீர்கள். மனசாட்சிப் படி செயல்படும் நாள்.

**மகரம்**
ராசிக்குள் சந்திரன் இருப்பதால் ஒரே நாளில் நான்கு ஐந்து வேலைகளை பார்க்க வேண்டி வரும். உத்தியோகத்தில் அதிருப்தி உண்டாகும். விழிப்புடன் செயல்பட வேண்டிய நாள்.

**கும்பம்**
கணவன்-மனைவிக்குள் அனுசரித்து போவது நல்லது. திடீர் பயணங்கள் செலவுகளால் திணறுவீர்கள். உத்தியோகத்தில் மறைமுக எதிர்ப்புகள் வந்து செல்லும். போராடி வெல்லும் நாள்.

**மீனம்**
ஆன்மிக பெரியோரின் ஆசி கிட்டும். பெற்றோரின் ஆதரவு கிட்டும். பதவியில் இருப்பவர்களின் உதவிகள் கிடைக்கும். வியாபாரத்தை பெருக்குவீர்கள். எண்ணங்கள் நிறைவேறும் நாள்.

# கொடநாடு குற்றவாளிகளை பிடிக்காவிட்டால் போராட்டம்

## தேனியில் ஓ.பி.எஸ். பேச்சு



சென்னை, ஓக. 02

தேனி பங்களாமேட்டில் நேற்று முன்னாள் முதல்-அமைச்சர் ஓ.பன்னீர்செல்வம் தலைமையில் கொடநாடு கொலை, கொள்ளை வழக்கில் தொடர்புடையவர்களை விரைந்து கைது செய்யக்கோரி ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

இதில் ஓ.பன்னீர்செல்வம் பேசியதாவது:

தான் முதலமைச்சர் ஆனவுடன் 3 மாதங்களில் கொடநாடு குற்றவாளிகளை கண்டுபிடிப்பேன் என மு.க.ஸ்டாலின் தெரிவித்தார். ஆனால் 30 மாதங்கள் ஆகியும் இந்த வழக்கு ஆமை வேகத்தில் சென்று கொண்டுள்ளது. ஜெயலலிதாவின் விசுவாசிகள் அனைவரும் இந்த வழக்கில் குற்றம் செய்தவர்கள் யார் என்பதை அறிய ஆவலுடன் உள்ளனர். எனவே இந்த வழக்கில் கொலை செய்தவர்கள் யார் என்பதை நாட்டு மக்களுக்கு அடையாளம் காட்ட வேண்டும். அதனை உணர்த்தும் வகையில் தான் இன்று தமிழகம் முழுவதும் ஆர்ப்பாட்டம் நடைபெறுகிறது. இனியும் காலம் தாழ்த்தினால் அ.ம.மு.க. தொண்டர்களுடன் இணைந்து இந்த போராட்டத்தை மேலும் தீவிரப்படுத்துவோம். எப்போதுமே மின்இணைப்பு துண்டிக்கப்படாமல் செயல்படும் கொடநாடு எஸ்டேட்டில் கொலை, கொள்ளைச் சம்பவம் நடந்தது மட்டுமின்றி, சிலமணிநேரம் மட்டும் மின் இணைப்பு துண்டிக்கப்பட்டது சந்தேகத்தை ஏற்படுத்தி உள்ளது. பதவி ஆசை கொண்ட எடப்பாடி பழனிச்சாமி இந்த வழக்கில் அக்கறைகாட்டாமல் தனது பதவியை தக்க வைப்பதிலேயே குறியாக இருந்தார். நாங்கள் ஆர்ப்பாட்டம் நடத்தப்போவது தெரிந்தவுடன் முன்னாள் அமைச்சர்கள் எங்களை கேலி செய்கின்றனர். இந்த வழக்கில் உண்மை குற்றவாளிகள் விரைவில் கண்டறியப்படுவார்கள் என நம்புகிறோம்-என்றார். (அ)

# இலங்கையிலிருந்து இராமேஸ்வரத்திற்கு ரூ.6 கோடி மதிப்பிலான தங்கம் கடத்தல்!

இராமநாதபுரம், ஓக. 02

இலங்கையில் இருந்து இராமேஸ்வரத்துக்கு கடத்தி வந்த 9 கிலோ தங்கம் நேற்று சிக்கியது. இதன் மதிப்பு ரூ.6 கோடியாகும். இது தொடர்பாக தங்கச்சிமடத்தை சேர்ந்த 4 பேரை பிடித்து பொலிஸார் விசாரணை நடத்தி வருகின்றனர். கடத்தலுக்கு பயன்பட்ட 2 படகுகளையும் பறிமுதல் செய்தனர். சமீப காலமாக அதிக அளவு கடத்தல் சம்பவங்கள் நடந்து வருவது பெரும் சவாலாக உள்ளது. இதற்கிடையே இதுபோன்ற கடத்தல் தொழிலுக்கு ஏழை, எளிய மீனவர்களை கடத்தல்காரர்கள் மூளைச் சலவை செய்து மீன்பிடி படகுகளை பயன்படுத்துவதாக தகவல் வெளியாகி உள்ளது. அவ்வாறுதான் இலங்கையில் இருந்து போதைப் பொருட்களைக் கச்சிதமாக கடத்தி செல்வதும், பதிலுக்கு தங்கம் கடத்தி வருவதும் தொடர்கிறது.

இராமேஸ்வரம் கடல் பகுதியில் நடக்கும் கடத்தல் குறித்து விசாரித்தபோது, குறைந்த நாட்களில் அதிக பணம் சம்பாதிக்கலாம் என்ற நோக்கத்தில் வசதி படைத்தவர்கள் கூட கடத்தல் தொழிலில் ஈடுபட்டு வருகின்றனர் என்றும், தமிழக கடற்கரையில் இருந்து படகில் ஏற்றி விடும் பொருட்களை நடுக்கடலில் நிற்கும் இலங்கை படகிற்கு கைமாற்றி விட்டால் மட்டும் போதும், குறிப்பிட்ட பணம் அல்லது தங்கம் கைமாறாக கொடுத்துவிடுவார்கள்.

அந்த வகையில்தான் பாதுகாப்புத்துறை அதிகாரிகள் தீவிர கண்காணிப்பை மீறி சர்வதேச கடல் வழியாக தமிழகத்திற்குள் படகில் பல கோடி மதிப்பிலான தங்கம் கடத்தி வரப்பட்ட சம்பவம் மத்திய, மாநில உளவுத்துறை அதிகாரிகளை அதிர்ச்சியடைய செய்துள்ளது. (அ)

# கி.வீரமணிக்கு ‘தகைசால் தமிழர்’ விருது

## சுதந்திர தின விழாவில் முதலமைச்சர் வழங்குகிறார்



சென்னை, ஓக. 02

தமிழ்நாட்டிற்கும், தமிழினத்தின் வளர்ச்சிக்கும் மாபெரும் பங்காற்றியவர்க ளைப் பெருமைப்படுத்தும் வகையில் ‘தகைசால் தமிழர்’ என்ற பெயரில் புதிய விருது 2021-ம் ஆண்டு முதல் முதலமைச்சர் மு.க.ஸ்டாலினின் ஆணைக்கிணங்க வழங்கப்பட்டு வருகிறது. இந்த ஆண்டிற்கான விருதாளரை தேர்வு செய்வதற்காக அமைக்கப்பட்ட குழுவின் கலந்தாலோசனைக் கூட்டம் சென்னை தலைமைச் செயலகத்தில் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் தலைமையில் நடைபெற்றது.

அக்கூட்டத்தில் இளம் வயதிலேயே பொது வாழ்க்கையில் ஈடுபட்டு, “சமூகப் பாகுபாட்டுக்கு ஆளான மக்களுக்கு“ ஆதரவாக தந்தை பெரியார் நடத்திய சமூகப் பிரசாரங்கள் மற்றும் போராட்டங்களில் தீவிரமாக ஈடுபட்டு நாற்பது முறை சிறைவாசம் அனுபவித்தவரும், 1962 இல் விடுதலை நாளிதழ் ஆசிரியராக பொறுப்பேற்று, தொடர்ந்து 60 ஆண்டுகளையும் கடந்து மிகச் சிறப்பாக பணி செய்து வருபவரும், உண்மை, பெரியார் பிஞ்சு, தி மாடர்ன் ரேடினாலிஸ்ட் (ஆங்கிலம்) இதழ்களுக்கு ஆசிரியராகவும், இணையத் தளங்கள் வாயிலாகவும் மேற்கண்ட கருத்துக்களைப் பரப்பி பன்னாட்டுத் தமிழர்களையும் ஒருங்கிணைத்து பெரியாரின் பணியைத் தொடர்ந்து வருபவரும், தமிழ்நாட்டிற்கும் தமிழினத்தின் வளர்ச்சிக்கும் பெரும் பங்காற்றிய தமிழரும், திராவிடர் கழகத் தலைவருமான கி. வீரமணிக்கு 2023 ஆம் ஆண்டிற்கான ‘தகைசால் தமிழர் விருது’ வழங்க தேர்வுக் குழுவினரால் ஒருமனதாக முடிவு செய்யப்பட்டது. ‘தகைசால் தமிழர்’ விருதிற்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட கி. வீரமணிக்கு, பத்து லட்சம் ரூபாய்க்கான காசோலையும், பாராட்டுச் சான்றிதழும், வருகிற 15ஆம் திகதி நடைபெறும் சுதந்திர தின விழாவில் முதலமைச்சர் மு.க.ஸ்டாலினால் வழங்கப்படும். இவ்வாறு அதில் குறிப்பிடப்பட்டுள்ளது. (அ)

# போராட்டக்காரர்களின் நோக்கம் நாட்டை வீழ்த்தவேண்டும் என்பதே!

## கூறுகின்றார் நாமல் ராஜபக்ஷ



**கொழும்பு, ஓக. 02**

**போராட்டத்தை ஏற்பாடு செய்தவர்களின் பிரதான நோக்கமாக நாட்டை வீழ்த்திவிடவேண்டும் என்ற எண்ணமே இருந்தது என பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்தார்.**

இவ்விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்-

போராட்டத்தை ஏற்பாடு செய்தவர்களின் பிரதான நோக்கமாக நாட்டை வீழ்த்திவிட வேண்டும் என்பதே ஒழிய, நாட்டை முன்னேற்றுவது அல்ல.

நாட்டின் நிர்வாகக் கட்டமைப்பில் மாற்றமொன்றை ஏற்படுத்த வேண்டும் என்று உண்மையாக போராட்டம் நடத்திய தரப்பினரைக்கூட, சில அரசியல் கட்சிகள் திசை திருப்பின.

அன்று எமது வீடுகளை எரித்தார்கள். வீடுகளை எரித்தவர்களுக்கு வெளிநாடுகளுக்குச் சென்று தொழில் செய்யக்கூட முடியாமல் உள்ளது.

ஏனெனில், அவர்கள் மீது பொலிஸாரினால் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

ஆனால், இதற்கு திட்டமிட்ட தரப்பினர் இன்னமும் நாடாளுமன்றுக்கு வருகை தந்து கொண்டிருக்கிறார்கள்.

குறைந்தது, அவர்களிடம் வாக்குமூலம்கூட பெறப்படவில்லை-என்றார். (அ)

# முதிரை மரப் பலகைகளுடன் கிளிநொச்சியில் ஒருவர் கைது



கிளிநொச்சி, ஓக. 02

கிளிநொச்சியில் பல லட்சம் ரூபாய் பெறுமதியான முதிரை மரப்பலகைகளுடன் ஒருவர் நேற்று கைது செய்யப்பட்டார்.

கிளிநொச்சி புன்னைநீராவி பகுதியில் நபர் ஒருவர் சட்டவிரோதமான முறையில் மரப்பலகைகள் வைத்திருப்பதாக வன ஜீவராசிகள் திணைக்களத்தினருக்கு கிடைக்கப்பெற்ற இரகசியத் தகவலையடுத்தே விசேட அதிரடிப் படையினரால் இக்கைது நடவடிக்கை இடம்பெற்றுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

இதன்போது வீடொன்றில் மறைத்து வைக்கப்பட்டிருந்த நிலையில் பல லட்சம் ரூபாய் பெறுமதியான முதிரைப் பலகைகளை பொலிஸார் கைப்பற்றினர். (அ)

# தையிட்டிப் பகுதியில் விகாரைக்கு எதிராக தொடர்கிறது போராட்டம்



யாழ்ப்பாணம், ஓக. 02

தையிட்டி சட்டவிரோத விகாரைக்கு எதிரான 6ஆவது கட்ட போராட்டம் நேற்று முன்தினம் ஆரம்பமாகிய நிலையில் நேற்று இரண்டாவது நாளாக முன்னெடுக்கப்பட்டு வருகிறது.

போராட்டக்களத்தில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம், செல்வராஜா கஜேந்திரன் மற்றும் கட்சியின் ஆதரவாளர்கள், பொதுமக்கள் என பலர் கலந்துகொண்டனர்.

மக்களது காணிகளில், அனுமதியின்றி இந்த விகாரை அமைக்கப்பட்ட நிலையில் மக்களது நிலங்களை மீள வழங்குமாறு கோரி இந்த போராட்டம் முன்னெடுக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (அ)

# ஐக்கிய தேசியக் கட்சியின் வருடாந்த மாநாடு செப்.10

ஐக்கிய தேசியக் கட்சியின் வருடாந்த மாநாடு எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் 10ஆம் திகதி கொழும்பில் நடைபெறவுள்ளது.

வருடாந்த மாநாட்டை ஏற்பாடு செய்வதற்கு பல குழுக்கள் நியமிக்கப்படவுள்ளதாக ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச் செயலாளர் பாலித ரங்கே பண்டார தெரிவித்தார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க, கட்சி மாநாட்டுக்கு முன்னர் 80 தேர்தல் கிளைகளை மறுசீரமைக்குமாறு ஐக்கிய தேசியக் கட்சியின் நிறைவேற்று குழுவுக்கு அறிவித்துள்ளார்.

135 தேர்தல் கிளைகளின் மறுசீரமைப்புப் பணிகள் நிறைவடைந்துள்ளதாக ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச் செயலாளர் பாலித ரங்கே பண்டார ஏற்கனவே அறிவித்துள்ளார்.

இதேவேளை, ஐக்கிய தேசியக் கட்சியின் செயற்குழு இன்று கூடும்போது பல தீர்மானங்கள் எடுக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

ஐக்கிய தேசியக் கட்சி தனது உறுப்பினர்களுக்கு கட்சியின் எதிர்காலச் செயற்பாடுகள் தொடர்பில் தெளிவுபடுத்துவதற்காக தொகுதி மட்டத்தில் கூட்டங்களை நடத்துவதையும் ஆரம்பித்துள்ளது. (அ)

# காரைநகர் பிரதேச சபை முன்னாள் தவிசாளரின் மீது தாக்குதல் முயற்சி!

யாழ்ப்பாணம், ஓக. 02

காரைநகர் பிரதேச சபை முன்னாள் தவிசாளர் கணேசபிள்ளை பாலச்சந்திரன் மீது தாக்குதல் முயற்சி ஒன்று மேற்கொள்ளப்பட்டது.

காரைநகர் ஆலடிச் சந்தியில் பிரதேச சபையின் அனுமதியின்றி சட்டவிரோதமாக மீன் சந்தைக் கட்டடம் ஒன்று அமைக்கப்படுவதாக கிடைத்த முறைப்பாட்டைத் தொடர்ந்து பொலிஸாருக்கும் பிரதேச சபை செயலாளருக்கும் முன்னாள் பிரதேச சபைத் தவிசாளர் க.பாலச்சந்திரனால் முறைப்பாடு செய்யப்பட்டும் உரிய நடவடிக்கை எடுக்கப்படாமையைக் குறித்த பகுதிக்கு அவரே நேரடியாக சென்றுள்ளார்.

இதன்போதே காரைநகர் பிரதேச சபை முன்னாள் தவிசாளர் மீது தாக்குதல் முயற்சி ஒன்று மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இது சம்பந்தமாக ஊர்காவற்றுறை பொலிஸ் நிலையத்திலும் வடக்கு மாகாண பிரதம செயலாளரிடமும் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

இது சம்பந்தமாக பூரண அறிக்கை சமர்ப்பிக்குமாறு சம்பந்தப்பட்ட உயர் அதிகாரிகளுக்கு பிரதம செயலாளர் உத்தரவிட்டதுடன் தொடர் நடவடிக்கை மேற்கொள்ளப்படும் எனவும் பிரதேச சபை செயலாளருக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைப் பயன்படுத்தி சட்டவிரோதமாக அமைக்கப்பட்ட கட்டடத்தை இடித்து அகற்றுவதற்கும் நடவடிக்கை எடுப்பதாகவும் முன்னாள் தவிசாளரிடம் உறுதியளித்தார். (அ)

# பெண்ணுக்கு பாலியல் தொல்லை; பொலிஸார் உட்பட மூவர் கைது!

கொழும்பு, ஓக. 02

பெண்ணொருவருக்கு பாலியல் தொல்லை ஏற்படுத்திய குற்றச்சாட்டில் பொலிஸ் விசேட அதிரடிப்படையின் பொலிஸ் உத்தியோகத்தர் உட்பட மூவரை தனவல்வில பொலிஸார் கைது செய்துள்ளனர்.

கைது செய்யப்பட்டுள்ள நபர் கொனஹேன விசேட அதிரடிப்படை முகாமில் கடமையாற்றும் பொலிஸ் கான்ஸ்டபிள் என தெரிவிக்கப் படுகிறது.

தனமல்வில, கிவுவார பிரதேசத்தைச் சேர்ந்த பெண் ஒருவர் செய்த முறைப்பாட்டுக்கு அமைய விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் கூறினர். (அ)

# உள்நாட்டு கோழி இறைச்சி விலை 100 ரூபாவால் குறைக்க இணக்கம்

கொழும்பு, ஓக. 02

உள்நாட்டு கோழி இறைச்சியின் விலையை 100 ரூபாவால் குறைப்பதற்கு கோழிப் பண்ணையாளர்கள் இணக்கம் தெரிவித்துள்ளனர்.

பண்ணையாளர்களுடன் இடம்பெற்ற கலந்துரையாடலின் பின்னர் இந்த இணக்கப்பாடு எட்டப்பட்டதாக விவசாய அமைச்சு தெரிவித்தது.

உள்நாட்டு கோழிப்பண்ணை தொழிலை பாதுகாப்பது மற்றும் நுகர்வோருக்கு குறைந்தபட்ச விலையில் கோழி இறைச்சியை பெற்றுக்கொடுப்பதே இதன் நோக்கமாகும்.

தற்போது இறக்குமதி செய்யப்படும் ஒரு கிலோகிராம் சோளத்திற்கு 75 ரூபா இறக்குமதி வரி விதிக்கப்பட்டுள்ளதால், சந்தையில் கோழி இறைச்சியின் விலை அதிகரித்துள்ள நிலையில், அந்த வரியை 25 ரூபாவாக குறைக்குமாறு வர்த்தகர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இது தொடர்பில் ஜனாதிபதிக்கு அறிவிக்க நடவடிக்கை எடுப்பதாக அமைச்சர் மஹிந்த அமரவீர இதன்போது தெரிவித்தார்.

எவ்வாறாயினும், அடுத்த வருடம் முதல் கோழி இறைச்சியின் விலையை மேலும் குறைக்க முடியும் என வர்த்தகர்கள் தெரிவித்துள்ளனர். (அ)

# கடும் வறட்சியான காலநிலை மீண்டும் மின்வெட்டு அபாயம்!

கொழும்பு, ஓக. 02

நாட்டில் தற்போது நிலவும் கடும் வறட்சியான காலநிலை காரணமாக நீர்மின் உற்பத்திக்கு நீர்வழங்கும் நீர்த் தேக்கங்களின் நீர்மட்டம் வேகமாக குறைந்து வருவதாகவும், வறட்சி நீடித்தால் போதியளவு மின்சாரம் உற்பத்தி செய்ய முடியாத காரணத்தினால் மின்வெட்டு ஏற்படலாம் என தெரிய வருகிறது.

பெரும்பாலான நீர்த்தேக்கங்களின் நீர்மட்டம் வேகமாக வீழ்ச்சியடைந்து வருவதால் நீர்த்தேக்கங்கள் மற்றும் பயிர்களுக்கு நீர் விநியோகம் ஆபத்தான கட்டத்தை எட்டியுள்ளதாக நீர்ப்பாசனப் பணிப்பாளர் நாயகம் பொறியியலாளர் அஜித் குணசேகர தெரிவித்தார்.

கடும் வறட்சி காரணமாக பல மகாவலி நீர்த்தேக்கங்களின் நீர்மட்டம் 50 வீத வரம்பை எட்டியுள்ளதாகவும் மகாவலி அதிகார சபை தெரிவித்துள்ளது.

இதேவேளை, சமனல நீர்த் தேக்கத்தின் நீர் கொள்ளளவு வெகுவாகக் குறைந்துள்ளதாகவும், பத்து நாட்களுக்குள் நீர் கிடைக்காவிட்டால் தென் மாகாணத்தில் ஒரு மணித்தியாலம் முதல் மூன்று மணித்தியாலங்கள் வரை மின்சாரம் துண்டிக்க நேரிடும் என இலங்கை மின்சார சபை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

விக்டோரியா நீர்த்தேக்கத்தின் நீர்மட்டம் குறைந்ததன் காரணமாக நீர்மின் உற்பத்தி மேலும் தடைப்படும்.

நீர்த்தேக்கத்தின் நீர்மட்டம் தற்போது 35 வீதமாக குறைந்துள்ளதாக நீர்த்தேக்கத்திற்கு பொறுப்பான பொறியியலாளர் வசந்த எஹலபிட்டிய தெரிவித்துள்ளார்.

"நீர்மின் உற்பத்தி மிகவும் மட்டுப்படுத்தப்பட்டுள்ளது, தற்போது பரபரப்பான இரவு நேரத்தில் ஒரு ஜிகாவோட் மணிநேர மின்சாரம் மட்டுமே உற்பத்தி செய்யப்படுகிறது," என்று அவர் கூறினார். (அ)

# ஊடக அடக்குமுறைக்கு எதிராக மக்களும் அணி திரளவேண்டும்!

## உழைக்கும் ஊடகவியலாளர் ஒன்றியம்

கொழும்பு, ஓக. 02

**ஊடகவியலாளர்கள் பொதுமக்களுக்காகவே தமது உயிரை தியாகம் செய்து அர்ப்பணிப்புடன் பணியாற்றி வருகின்றனர். அவர்களுக்கு எதிராக தாக்குதல்கள் நடத்தப்படும் போது பொது மக்களும் தமது எதிர்ப்பை வெளியிடவேண்டும் என இலங்கை உழைக்கும் ஊடகவியலாளர் சங்கத்தின் தலைவர் துமிந்த சம்பத் தெரிவித்தார்.**

மருதானை சி.எஸ்.ஆர். நிலையத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

ஊடகவியலாளர் தரிந்து உடுவரகெதர போன்று ஊடகவியலாளர்கள் தாக்கப்படுவது இது முதல்முறையல்ல.

ஊடக சுதந்திரம் தொடர்பிலான இலங்கையின் வரலாறு கரும்புள்ளியாகவே உள்ளது.

ஊடகவியலாளர்களை மிகவும் மிலேச்சத்தனமாக நடத்தும் நாடாகவே இலங்கையை உலகம் பார்க்கிறது.

தரிந்து மீது நடத்தப்பட்ட தாக்குதலானது அவர் கைதுசெய்யப்பட்டதற்கும் அப்பால் சென்றதொரு விடயமாகும்.

கைதுசெய்யப்படுவது ஒரு நிகழ்ச்சி நிரலாக இருந்த போதிலும் இங்கு அவர்மீது கடுமையான தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. இதனை வன்மையாக கண்டிக்கிறோம்.

தொழிற்சங்கங்களும், சிவில் அமைப்புகளும், ஊடகவியலாளர்களும் நாட்டு மக்களில் ஒரு பகுதியாகும்.

ஊடகவியலாளர்கள் தமது உயிரை தியாகம் செய்துதான் மக்களுக்காக தகவல்களை திரட்டி வழங்குகிறார்கள். இவர்களுக்கு எதிராக அதிகாரத்தை பிரயோகிக்கும் போது மக்கள் எழுச்சிக்கொள்ள வேண்டும்.

பொலிஸாருக்கு இந்த நாட்டின் பிரச்னைகள் குறித்து தெரியாதா? அவர்களுக்கு இந்த சமூகத்தின் மீது அக்கறை இல்லையா?.

இவ்வாறு சமூக சமத்துவத்துக் கும் மக்களின் பிரச்னைகளுக்கு எதிராக குரல்கொடுப்பவர்கள் மீது தாக்குதல்கள் நடத்தப்படுவது துரதிர்ஷ்டவசமானதுதான்.

மக்களுக்கு தகவல்களை திரட்டி வழங்குவபவர்கள் மீது தாக்குதல் நடத்தப்படுவது மிகவும் கவலைக்குரியதாகும்.

ஊடகவியலாளர்கள்மீது தாக்குதல்கள் நடைபெறும் சந்தர்ப்பங்களில் மக்கள் அதற்கு எதிராக தமது எதிர்ப்பை வெளியிட வேண்டும்.

எக்னெலிகொட காணாமல் ஆக்கப்பட்டமை, லசந்த விக்ரமதுங்க படுகொலை செய்யப்பட்டமை, சிவராம் படுகொலை செய்யப்பட்டமை, போத்தல ஜெயந்த மீது தாக்குதல் நடத்தப்பட்டமை மற்றும் கடந்த காலங்களில் ஊடக நிறுவனங்கள்மீது தாக்குதல்கள் நடத்தப்பட்டதுடன் அவை எரியூட்டப்பட்டன.

இந்த சம்பவங்கள் எதற்கும் இன்னமும் நீதி கிடைக்கவில்லை.

இவைதான் தவறான முன்னுதாரணங்கள். வரலாற்றில் இடம்பெற்ற சம்பவங்கள் மற்றும் சமகாலத்தில் இடம்பெறும் சம்பவங்களுக்கு எதிராக நாம் ஒன்றிணைய வேண்டும் - என்றார். (அ)

# யாழ். இளைஞர்கள் நான்கு பேர் கட்டுநாயக்கவில் கைதாகினர்!

கொழும்பு, ஓக. 02

போலி கடவுச்சீட்டை பயன்படுத்தி ஐரோப்பாவுக்கு செல்ல முற்பட்ட ஐந்து இளைஞர்களை நேற்று முன் தினம் கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தின் புறப்பாடு முனையத்தில் வைத்து குடிவரவு மற்றும் குடியகல்வு பிரிவினர் கைது செய்துள்ளனர்.

புத்தளத்தைச் சேர்ந்த 24 வயதான ஒரு சந்தேக நபர் அனைத்து சம்பிரதாயங்களையும் முடித்துக் கொண்டு டோஹாவிற்கும், அங்கிருந்து ஆஸ்திரியாவுக்கும் விமானத்தில் ஏறுவதற்கான கடைசி வாயிலுக்கு வந்திருந்தார்.

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த மேலும் நான்கு இளைஞர்கள் மாலைதீவுக்குச் சென்று அங்கிருந்து ஜேர்மனிக்கு விமானம் ஏறுவதற்காக கடைசி வாயிலுக்கு வந்திருந்தனர்.

குடிவரவு மற்றும் குடியகல்வு எல்லைப் பரிசோதனைப் பிரிவினர், சந்தேகநபர்கள் கடைசி நேரத்தில் சமர்ப்பித்த அனைத்து ஆவணங்களையும் மீண்டும் ஆய்வு செய்ததில், கடவுச்சீட்டுகள் மற்றும் விமான ரிக்கெட்டுகள் போலியானவை என்பதை கண்டுபிடித்தனர்.

சந்தேக நபர்கள் மேலதிக விசாரணைகளுக்காக விமான நிலைய சிஐடியிடம் ஒப்படைக்கப்பட்டனர். (அ)

# கராப்பிட்டிய போதனா வைத்தியசாலையின் மின்சார கட்டண நிலுவை 240 இலட்சம் ரூபா

கொழும்பு, ஓக. 02

காலி, கராப்பிட்டிய போதனா வைத்தியசாலையின் இரண்டு மாத நிலுவை மின்சார கட்டணமாக 240 ,

இலட்சம் ரூபா மின்சார சபைக்கு செலுத்த வேண்டியுள்ளதாக வைத்தியசாலை தகவல்கள் தெரிவித்தன.

இதேவேளை, மின்கட்டணம் அதிகரிக்கப்படுவதற்கு முன்னர் கராப்பிட்டிய போதனா வைத்தியசாலையின் மாதாந்த மின் கட்டணம் சுமார் 80 இலட்சம் ரூபாவாக இருந்த நிலையில், மின் கட்டண அதிகரிப்புடன் மாதாந்த மின்கட்டணம் 120 இலட்சம் ரூபாவாக அதிகரித்துள்ளதாக வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன.

# ஓட்டோ கட்டணம் உயராது

கொழும்பு, ஓக். 02

முச்சக்கரவண்டி கட்டணம் திருத்தப்படமாட்டாது என முச்சக்கரவண்டிச் சங்கங்கள் தெரிவித்துள்ளன.

ஒழுங்குபடுத்தல் அதிகாரசபையின் ஊடாக முச்சக்கர வண்டி கட்டணங்கள் பிரத்தியேகமாக ஒழுங்குபடுத்தப்படும் வரை இவ்வாறு கட்டணங்கள் திருத்தப்படமாட்டாது என அறிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன், மாதந்தோறும் எரிபொருள் விலைகள் திருத்தப்படுவதன் காரணமாக முச்சக்கர வண்டிக் கட்டணத்தை அதிகரிக்கவோ அல்லது குறைக்கவோ முடியாது என முச்சக்கரவண்டிச் சங்கங்கள் தெரிவித்துள்ளன.

முச்சக்கரவண்டிக் கட்டணங்களை ஒழுங்குபடுத்துவதற்கென குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளபோதும், குறித்த குழுவினால் இதுவரை அவ்வாறான தொரு ஒழுங்குபடுத்தல் முறைமை நடைமுறைப்படுத்தப்படவில்லை என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கமைய, கட்டணக் கட்டுப்பாடொன்று இல்லாததன் காரணமாக, அரசாங்கத்தின் தீர்மானங்களின்படி முச்சக்கர வண்டிக் கட்டணங்களை திருத்தாதிருக்க தீர்மானிக்கப்பட்டுள்ளதாக முச்சக்கரவண்டிச் சங்கங்கள் தெரிவிக்கின்றன.

கொழும்பு உள்ளிட்ட சில நகர்ப்புறங்களில் மாத்திரம் கட்டண மீற்றர் பொருத்தப்பட்ட முச்சக்கர வண்டிகள் சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளன. ஏனைய பிரதேசங்களில் கட்டண மீற்றர் இன்றி வாடகை அடிப்படையிலே முச்சக்கர வண்டிகள் சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளதை அவதானிக்க முடிகிறது.

இதன்படி, கட்டண மீற்றர் பொருத்தப்பட்ட முச்சக்கர வண்டிகள் பெரும்பாலும் முதல் கிலோ மீற்றருக்கு 110 ரூபாவும், இரண்டாவது கிலோ மீற்றருக்கு 100 ரூபாவும் அறவிடுகின்றன.

ஏனைய பிரதேசங்களில் சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ள முச்சக்கர வண்டிகளில் தங்கள் நினைத்த தொகையினை கட்டணமாக அறவிடும் நிலைமை காணப்படுகிறது.

இதன் காரணமாக கஷ்டப் பிரதேசங்களில் வாழும் மக்கள் பாரிய சிரமங்களை எதிர்கொண்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

# வைத்தியசாலை கால்வாயில் நோயாளியின் சடலம் மீட்பு!

கொழும்பு, ஓக. 02

களுத்துறை-நாகொட வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த நோயாளி ஒருவர் கால்வாய் ஒன்றில் விழுந்து உயிரிழந்த நிலையில் நேற்றுக் காலை சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

மத்துகம ஓவ்டிகல பிரதேசத்தைச் சேர்ந்த 70 வயதான நபரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

இந்த நபர் காலில் ஏற்பட்டுள்ள காயம் ஒன்றுக்கு சிகிச்சை பெறுவதற்காக சில தினங்களுக்கு முன்னர் வைத்தியசாலைக்கு வந்துள்ளார்.

வைத்தியசாலையின் 5 ஆவது விடுதியில் தங்கி அவர் சிகிச்சை பெற்று வந்துள்ளதாக தெரியவருகிறது.

நோயாளியின் மரணம் தொடர்பில் களுத்துறை தெற்கு பொலிஸார் வைத்தியசாலை ஊழியர்களிடம் விசாரணைகளை நடத்தி வாக்குமூலங்களை பதிவு செய்துள்ளனர். (அ)

# இந்தியர் எனக்கூறி பலரிடம் கோடிக்கணக்கில் மோசடி!

கொழும்பு, ஓக. 02

இந்திய பிரஜை என தன்னை இனங்காட்டிக்கொண்டு பலரிடம் கோடிக்கணக்கில் பணத்தை மோசடி செய்த ஒருவரை கண்டி தலைமையக பொலிஸார் கைது செய்துள்ளனர்.

கண்டியில் பிரதான ஹோட்டல் ஒன்றில் இரண்டு நாட்கள் தங்கியிருந்து விட்டு, கட்டணத்தைச் செலுத்தாது தப்பிச் சென்ற சம்பவம் தொடர்பாக கிடைத்த முறைப்பாடுக்கு அமைய கண்டி தலைமையக பொலிஸ் நிலையத்தின் சுற்றுலாப் பிரிவின் அதிகாரிகள் சந்தேக நபரை கைது செய்து விசாரணை நடத்தியுள்ளனர்.

விசாரணைகளில் அந்த நபர் இந்தியர் அல்லர் இலங்கையர் என தெரியவந்துள்ளது.

சுற்றுலா பொலிஸார் சந்தேக நபரை கண்டி தலைமையக பொலிஸ் நிலையத்தில் ஒப்படைத்தனர்.

இதனையடுத்து நடத்தப்பட்ட விசாரணைகளில் சந்தேக நபர் பலரை ஏமாற்றி கோடிக்கணக்கில் பணத்தை மோசடி செய்துள்ளமை தெரியவந்துள்ளது.

சந்தேக நபர் தன்னை இந்திய பிரஜையாக காட்டிக்கொண்டு சுவிற்ஸர்லாந்து, அமெரிக்கா, இங்கிலாந்து போன்ற நாடுகளுக்கு செல்ல விஸா பெற்று தருவதாக கூறி கோடிக்கணக்கான பணத்தை மோசடி செய்துள்ளமை தெரியவந்துள்ளது.

சந்தேக நபர் ஆங்கிலம் மற்றும் தமிழ் மொழிகளை சரளமாக பேசக்கூடியவர் என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சந்தேக நபர் பிரதேசத்தை சேர்ந்த இந்த சந்தேக நபர் கண்டியில் உள்ள முன்னணி பாடசாலை ஒன்றில் கல்வி கற்றுள்ளார்.

சந்தேக நபருக்கு எதிராக குற்றவியல் விசாரணை திணைக்கத்தில் சுமார் 30 முறைப்பாடுகள் பதிவாகியுள்ளதுடன் கல்கிஸ்சை பொலிஸ் பிரிவில் 22 பிடியாணைகள் பிறப்பிக்கப்பட்டிருப்பது விசாரணைகளில் தெரியவந்துள்ளது. (அ)

# தேர்த்திருவிழாவில் தாலிக்கொடி களவு!

## 4 பெண்கள் கைது

யாழ்ப்பாணம், ஓக. 02

நீர்வேலியிலுள்ள பிள்ளையார் ஆலயத்தில் தேர்த்திருவிழாவின்போது பெண் ஒருவரின் தாலிக்கொடியை களவாடிய சந்தேகத்தில் 4 பெண்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். அவர்களில் இந்தியப் பிரஜை ஒருவரும் உள்ளடங்கியுள்ளார்.

நேற்று முன் தினம் நடைபெற்ற தேர்த்திருவிழாவின் போது தண்ணீர் பந்தலில் பானங்கள் வழங்கிக் கொண்டிருந்தபோது பெண்ணின் தாலிக் கொடி களவாடப்பட்டுள்ளது. இதையடுத்து அங்கு சந்தேகத்துக்கிடமான முறையில் நடமாடிய சிலாபத்தைச் சேர்ந்த 26 வயது பெண், வவுனியாவைச் சேர்ந்த 37 வயதான பெண், மாத்தறையைச் சேர்ந்த 28 வயதுப் பெண் மற்றும் 49 வயதான இந்தியப் பிரஜை ஆகியோர் மக்களால் பிடிக்கப்பட்டு கோப்பாய் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டனர்.

அவர்கள் 4 பேரிடமிருந்தும் களவாடப்பட்ட தாலிக்கொடி மீட்கப்படாத நிலையில் மேலதிக விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. (அ)

# தலிபான் அரசின் பிரதிநிதியை சந்தித்த இலங்கை இராஜதந்திரி

கொழும்பு, ஓக. 02

**இந்தோனேஷியாவுக்கான இலங்கைத் தூதுவர் ஓய்வுபெற்ற வைஸ் அட்மிரல் ஜெயநாத் கொலம்பகே ஆப்கானிஸ்தானின் தலிபான் அரசின் துணை செய்தித் தொடர்பாளரும் வெளியுறவு மக்கள் தொடர்பாடல் உதவிப் பணிப்பாளருமான ஹாபிஸ் ஷியா ஹமட்டுடன் இந்தோனேஷியாவில் சந்திப்பொன்றை நடத்தியுள்ளார்.**



இந்தோனேஷியா தலைநகர் ஜகார்த்தாவில் இந்தச் சந்திப்பு கடந்த மாதம் 14ஆம் திகதி நடைபெற்றுள்ளது.

ஹாபிஸ் ஷியா ஹமட் இந்தோனேஷியாவுக்கு விஜயமொன்றை மேற்கொண்டிருந்த சந்தர்ப்பத்தில் இலங்கை, சிங்கப்பூர், பங்களாதேஷ் உட்பட அந்நாட்டில் உள்ள சில முக்கிள இராஜதந்திரிகளுடன் கலந்துரையாடல் ஒன்றை நடத்தியுள்ளார்.

இந்தச் சந்திப்பில் இலங்கை சார்பில் வைஸ் அட்மிரல் ஜெயநாத் கொலம்பகேயும் கலந்துகொண்டுள்ளார். என்றாலும், இந்தோனேஷியாவில் உள்ள இலங்கைத் தூதரகம் இந்தச் சந்திப்பு குறித்து எவ்வித தகவல்களையும் பகிர்ந்திருக்கவில்லை.

இந்நிலையில், ருவிட்டர் பதிவொன்றின் ஊடாக ஹாபிஸ் ஷியா ஹமட் சந்திப்பை உறுதிப்படுத்தியுள்ளதுடன், புகைப்படமொன்றையும் வெளியிட்டுள்ளார்.

வைஸ் அட்மிரல் கொலம்பகே, முன்னாள் கடற்படைத் தளபதி மற்றும் முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ வின் ஆட்சிக்காலத்தில் வெளிவிவகார அமைச்சின் செயலாளராகவும் பணியாற்றியிருந்தார்.

தாலிபான் வெளியிட்டுள்ள சந்திப்பு குறித்த புகைப்படத்தில் வைஸ் அட்மிரல் கொலம்பகேவுக்கு பின்னால் இலங்கை கொடி இருக்கின்றமை குறித்து சர்வதேச அவதானம் செலுத்தப்பட்டுள்ளது.

ஆப்கானிஸ்தானில் உள்ள தலிபான் நிர்வாகத்தை இலங்கை அரசாங்கம் அங்கீகரிக்கவில்லை என்பதுடன், அட்மிரல் கொலம்பகே ஆப்கானிஸ்தான் தூதுக்குழுவை சந்திப்பதற்கு கொழும்பிடம் அனுமதி பெறவில்லை என வெளியுறவு அமைச்சின் செய்தித் தொடர்பாளர் தெரிவித்துள்ளார்.

கடந்த இரண்டு ஆண்டுகளில் ஆப்கானிஸ்தானுடன் இலங்கை எந்த உத்தியோகபூர்வ சந்திப்புகளை நடத்தவில்லை எனவும் அவர் கூறியுள்ளார்.

ஓகஸ்ட் 15, 2021அன்று தலிபான்கள் ஆப்கானிஸ்தானின் அதிகாரத்தைக் கைப்பற்றியதைத் தொடர்ந்து, இலங்கை அரசாங்கம் காபூலில் உள்ள இலங்கை தூதரகத்தின் பணிகளை தற்காலிகமாக நிறுத்திக்கொண்டிருந்தது.

இலங்கைக்கான ஆப்கானிஸ்தான் தூதுவர் கடந்த மே 27, 2002 அன்று இலங்கையை விட்டு வெளியேறியிருந்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

(அ)

# இலங்கைப் பிரஜைகள் 43 பேரை கடத்த முயற்சி

## ஜோர்தானில் மூவர் கைது

கொழும்பு, ஓக. 02

ஜோர்தானில் இருந்து அதன் மேற்குக் கரைக்கு இலங்கைப் பிரஜைகள், 43 பேரை கடத்தும் முயற்சியை ஜோர்தான் பாதுகாப்புத் துறையினர் முறியடித்துள்ளனர்.

பாலஸ்தீனிய பிரதேசங்களுக்குள் சட்டவிரோத பணிக்காக குறித்த இலங்கையர்கள் அழைத்துச் செல்லப்படவிருந்ததாக தெரிவிக்கப்படுகிறது.

அதேநேரம் ஆரம்ப விசாரணைகளுக்கு அமைய மனித கடத்தல் குற்றச்சாட்டின் கீழ் மூன்று இடைத்தரகர்கள் கைது செய்யப்பட்டுள்ளதாக ஜோர்தான் ஊடகம் ஒன்று அறிவித்துள்ளது.

குறித்த இலங்கையர்கள் மனித கடத்தலில் பாதிக்கப்பட்டவர்களாகக் கருதப்பட்டு, அவர்களுக்குத் தேவையான பாதுகாப்பையும் ஆதரவையும் ஜோர்தான் அதிகாரிகள் வழங்கியுள்ளனர்.

(அ)

# 2 பிரதேசங்களில் காட்டுத் தீ!

கொழும்பு, ஓக. 02

நிலவும் வறட்சியான காலநிலையுடன் இரண்டு பிரதேசங்களில் காட்டுத் தீ சம்பவங்கள் பதிவாகியுள்ளன.

இதன்படி, உடுதும்பர - நவனகல வனப்பகுதியில் நேற்று முன் தினம் காலை ஏற்பட்ட தீ கட்டுப்பாட்டுக்கு கொண்டு வரப்பட்டுள்ள நிலையில் சுமார் 50 ஏக்கருக்கும் அதிகமான வனப்பகுதி தீக்கிரையாகியுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

அத்துடன் வெள்ளவாய - ஆனபல்லம பகுதியிலும் நேற்று முன் தினம் காட்டுத்தீ பரவியிருந்தது.

இந்த தீப்பரவல் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்பட்டுள்ளதுடன் 20 ஏக்கர் வனப்பகுதி தீக்கிரையாகியுள்ளதாக தெரிவிக்கப்பட்டது.

வனப்பகுதியில் தீப்பரவல் சம்பவங்கள் ஏற்படுமாயின் 117 என்ற தொலைபேசி இலக்கத்திற்கு அறிவிக்க முடியும் என தேசிய அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் தெரிவித்துள்ளது.

(அ)

# ஐந்தாக பிளவுபட்ட பொதுஜன பெரமுன!

## கூறுகிறார் உதய கம்மன்பில

கொழும்பு, ஓக. 02

பொதுஜன பெரமுன தற்போது 5 குழுக்களாக பிரிந்துள்ளதாக பிவித்துறுஹெல உறுமயவின் தலைவர் பாராளுமன்ற உறுப்பினர் உதய கம்மன்பில தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

பொதுஜன பெரமுனவில் உள்ள சிலர் மீண்டும் ஜனாதிபதியாக ரணில் விக்கிமசிங்கவை தெரிவு செய்ய வேண்டும் என்ற நிலைப்பாட்டில் உள்ளனர்.

மற்றும் சிலர் அவ்வாறான தீர்மானத்தை மேற்கொள்ள வில்லை என குறிப்பிடுகின்றனர்.

தற்போது அரசாங்கமாக உள்ள பொதுஜன பெரமுனவுக்குள் 3 குழுக்கள் இயங்குகின்றன.

அத்துடன் அரசாங்கத்தில் இருந்து வெளியேறியுள்ள இரண்டு குழுக்கள் உள்ளன- என்றார்.

(அ)

# ஜூன் மாதத்தில் ஏற்றுமதி வருவாய் ஒரு பில்லியன் டொலருக்கும் அதிகம்

கொழும்பு, ஓக. 02

கடந்த ஜூன் மாதம் ஏற்றுமதி வருவாய் தொடர்ந்தும் இரண்டாவது மாதமாக ஒரு பில்லியன் அமெரிக்க டொலருக்கும் அதிகமாக பதிவாகியுள்ளதாக இலங்கை மத்திய வங்கி அறிவித்துள்ளது.

கடந்த மே மாதமும் ஏற்றுமதி வருவாய் ஒரு பில்லியன் அமெரிக்க டொலருக்கும் அதிகமாக பதிவாகியிருந்தது.

இதன்படி, மத்திய வங்கியின் தரவுகளுக்கு அமைய ஆண்டின் முதல் 6 மாதங்களில் ஏற்றுமதி வருவாய் 5.9 பில்லியன் டொலராகும்.

எனினும் கடந்த ஆண்டுடன் ஒப்பிடுகையில் இந்த ஆண்டு ஏற்றுமதி வருவாய் வீழ்ச்சியை பதிவு செய்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

அதேநேரம் கடந்த ஜூன் மாதம் சுற்றுலாத்துறையின் ஊடாக 123 மில்லியன் டொலர் வருவாய் கிடைத்துள்ளது.

இது கடந்த வருடத்துடன் ஒப்பிடுகையில் 173 சதவீத வளர்ச்சியாகும்.

இதேவேளை, ஆண்டின் முதல் 6 மாதக்காலப்பகுதியில் 2 ஆயிரத்து 823 மில்லியன் டொலர் வெளிநாட்டு பணவனுப்பல் ஊடாக கிடைத்துள்ளதாக இலங்கை மத்திய வங்கி தெரிவித்துள்ளது.

(அ)

# சுற்றுலாப் பயணிகளின் வருகை அதிகரிக்கிறது

கொழும்பு, ஓக. 02

இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபையின் தற்காலிகத் தரவுகளுக்கு அமைய இந்த ஆண்டின் முதல் ஏழு மாதங்களில் சுற்றுலாப் பயணிகளின் வருகை கடந்த ஆண்டு முழுவதுமாக பதிவுசெய்யப்பட்ட மொத்த சுற்றுலாப் பயணிகளின் வருகையை கடந்துள்ளது.

இந்த ஆண்டு ஜனவரி மாதம் முதலாம் திகதியிலிருந்து ஜூலை 27ம் திகதி வரையிலான காலப்பகுதிக்குள், 2022ஆம் ஆண்டின் 12 மாதங்களை விட 4 சதவீத அதிக சுற்றுலா பயணிகளின் வருகையை பதிவு செய்துள்ளது.

கடந்த ஆண்டு 7 லட்சத்து 48 ஆயிரத்து 377 சுற்றுலாப் பயணிகள் இலங்கைக்கு வந்துள்ளனர்.

எனினும் இந்த ஆண்டு முதல் 7 மாதங்களில் சுமார் 7 லட்சத்து 50 ஆயிரம் சுற்றுலாப் பயணிகள் இலங் கைக்கு வந்துள்ளதாக தரவுகள் தெரிவிக்கின்றன.

அதேநேரம் கடந்த ஜூன் மாதம் நாட்டுக்கு ஒரு லட்சத்து 20 ஆயிரத்துக்கும் அதிகமான சுற்றுலாப் பயணிகள் இலங்கைக்கு வந்துள்ளனர்.

இதன்படி, இந்த முதல் 7 மாத காலப்பகுதியில் 6 மாதங்களில் மாதாந்த சுற்றுலா பயணிகளின் வருகை ஒரு லட்சத்தை கடந்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

(அ)

# சாவகச்சேரியில் வீடுடைத்து பணமும் நகைகளும் திருட்டு

யாழ்ப்பாணம், ஓக. 02

வீட்டில் யாரும் இல்லாத நேரத்தில் 3 இலட்சம் ரூபா பணமும் மூன்றரைப் பவுண் நகையும் திருடப்பட்டுள்ளது என்று சாவகச்சேரி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

கல்வயல் பகுதியில் நேற்று முன் தினம் மாலை இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

கணவன் மேசன் வேலைக்குச் சென்றுள்ள நிலையில் மனைவி அருகிலுள்ள காணிக்கு ஆட்டைக் கட்டி விட்டு திரும்பி வந்து பார்த்தபோது வீட்டின் பின்கதவின்பூட்டு உடைக்கப்பட்டிருந்ததை அவதானித்து விட்டு, உள்ளே சென்று பார்த்த போது 3 இலட்சம் ரூபா பணமும், மூன்றரைப் பவுண் நகையும் திருடப்பட்டமை தெரியவந்தது.

(அ)

# நிலத்தடி வெப்பநிலை உயர்வு: சென்னை போன்ற நகரங்களில் கட்டடங்களுக்கு ஆபத்தா?

ஜோஸ் கார்லோஸ் கியூட்டோ

உலகம் முழுவதும் இருக்கும் விஞ்ஞானிகள் நிலத்தடி வெப்பநிலை மாற்றத்தைப் பெரிய நகரங்களுக்கு அடியில் பதுங்கியிருக்கும் "அமைதியான ஆபத்து" என்று வரையறுக்கின்றனர்.

சமீப காலம் வரை, பொதுமக்களின் குடியிருப்புக்கள் உள்ளிட்ட உள்கட்டமைப்பில் அதன் விளைவுகள் குறித்து முழுமையாக ஆராய்ச்சி மேற்கொள்ளப்படவில்லை.

நிலத்தடி நீர் மாசுபாடு, ஆஸ்துமா மற்றும் மாரடைப்பு போன்ற சுகாதார நிலைமைகளுக்கும் அதற்கும் இடையே உள்ள தொடர்புகள் குறித்து பல்வேறு ஆராய்ச்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

ஆனால், அமெரிக்காவில் உள்ள நார்த்வெஸ்டர்ன் பல்கலைக்கழகத்தின் சமீபத்திய ஆய்வு, நகர்ப்புறங்களில் பூமிக்குக் கீழ் உள்ள மண்ணின் மாற்றத்துடன் இந்த நிகழ்வை முதன்முறையாக தொடர்புபடுத்தி ஒரு ஆராய்ச்சியை மேற்கொண்டுள்ளது.

"வெப்பநிலை மாறுபாடுகளின் விளைவாக நிலம் சிதைவடைவது மட்டுமின்றி இந்த மாறுபாடுகளைத் தாங்கும் வகையில் வடிவமைக்கப்பட்ட சிவில் கட்டமைப்புகள் எதுவும் இல்லை," என்று ஆராய்ச்சிக்குழுவின் தலைவர், சிவில் மற்றும் சுற்றுச்சூழல் பொறியியல் பேராசிரியர் அலெஸாண்ட்ரோ ரோட்டா லோரியா கூறுகிறார்.

ஆனால், இந்த அச்சுறுத்தலையும் மக்களுக்குத் தேவையான ஆற்றலாகப் பயன்படுத்திக் கொள்ளலாம் என்றும் அவர் கூறுகிறார். ரோட்டா லோரியாவின் கூற்றுப்படி, இந்த வெப்பத்தை சரியான சூழ்நிலையில் அறுவடை செய்தால் அதை ஒரு ஆற்றல் வளமாக பயன்படுத்தமுடியும்.

**நிலத்தடி வெப்பநிலை மாற்றம் என்றால் என்ன?**

"நிலத்தடி வெப்பநிலை மாற்றம் என்பது பூமியின் மேற்பரப்பிற்கு கீழே வெப்பநிலை அதிகரிப்பதை விவரிக்கப் பயன்படுத்தப்படும் ஒரு சொற்றொடர்," என்று ரோட்டா லோரியா சுருக்கமாகக் கூறுகிறார்.

'இது நிலத்தடி தட்பவெப்ப நிலைகளில் ஏற்படும் மாற்றங்களைக் குறிக்கிறது. ஆனால் இது பூமியில் ஏற்படுத்தப்படும் மனிதத் தவற்றின் மற்றொரு விளைவாக இருந்தாலும், மேற்பரப்பில் ஏற்படும் காலநிலை மாற்றத்திற்கும் இதற்கும் எந்த தொடர்பும் இல்லை," என்று அவர் கூறுகிறார்.


உலகெங்கிலும் உள்ள பல நகர்ப்புறங்களில், அடித்தளங்கள், நிலத்தடி போக்குவரத்து அமைப்புகள், கார் நிறுத்துமிடங்கள், வெப்பமூட்டும் நெட்வொர்க்குகள் மற்றும் கட்டுமானப் பொருட்களிலிருந்து பூமியின் மேற்பரப்புக்குக் கீழே வெப்பம் தொடர்ந்து பரவுகிறது, அவை பகலில் வெப்பத்தை உறிஞ்சி தக்கவைத்து இரவில் வெளியிடுகின்றன.

அதனால்தான் நகரங்கள் பொதுவாக கிராமப்புறங்களை விட வெப்பமானவை என்பதுடன் இந்த நிகழ்வின் விளைவுகளை அதிகம் வெளிப்படுத்துகின்றன.

**இது நகரங்களை எவ்வாறு பாதிக்கிறது?**

நிலத்தடி வெப்பநிலை மாற்றம் பற்றிய முதல் ஆய்வுகள் சுமார் 25 ஆண்டுகளுக்கு முன்பே தொடங்கி விட்டன.

இந்த வெப்பநிலை மாறுபாடுகள் சாதாரண தாவர வளர்ச்சி, நிலத்தடி நீர் பாயும் விதம், மக்களின் ஆரோக்கியம் மற்றும் நிலத்தடி போக்குவரத்து பாதைகளின் நிலை ஆகியவற்றை பாதிக்கலாம். இது ஒவ்வொரு ஆண்டும் மாபெரும் இடையூறுகளை ஏற்படுத்துகிறது.



ரோட்டா லோரியாவின் ஆய்வுகள் பொதுமக்கள் பயன்படுத்தும் கட்டுமானங்கள் மற்றும் உள்கட்டமைப்பில் இந்த நிகழ்வின் விளைவுகள் குறித்து கவனம் செலுத்துகின்றன.

பூமியின் மேற்புறத்தில் ஏற்படுத்தப்பட்டுள்ள கடுமையான பாதிப்புகள், நெறிமுறைகளை மீறி கட்டப்படும் கட்டடங்களின் செயல்பாடுகள் போன்ற விஷயங்கள் சிக்கல்களை ஏற்படுத்தக்கூடும் என்றும், அதன் விளைவாக மாபெரும் பொருளாதார இழப்புகளை ஏற்படுத்தும் வகையில் பாதிப்புக் கள் ஏற்படும் என்றும் இந்த ஆய்வுகளில் தெரியவந்துள்ளது.

மக்களின் பாதுகாப்பு குறித்து இப்போதைக்கு யாரும் கவலைப்படுவதாகத் தெரியவில்லை.

"ஒரு கட்டிடம் திடீரென இடிந்து விழுவது போல் இந்த பாதிப்பு ஏற்படாது. ஆனால் இந்த கட்டமைப்புகள் மெதுவாக சிக்கலுக்கு உள்ளாகி வருகின்றன. இது போன்ற மாற்றங்கள் மெதுவாக நடைபெறும் போது விளைவுகள் மிகவும் மோசமாக இருக்கலாம், ஆனால் அது போன்ற பாதிப்புகள் ஏற்பட நீண்ட காலம் ஆகும்," என்கிறார் அவர்.



"நிலத்தடி வெப்பநிலை மாற்றம் ஏற்கெனவே பாதிப்புகளை ஏற்படுத்தியிருக்கலாம். ஆனால், அந்த பாதிப்பு கள் பற்றி நமக்கு எதுவும் தெரியாது என்பதால் அவற்றை இந்த நிலத்தடி வெப்பநிலை மாற்றத்துடன் நாம் தொடர் புபடுத்தவில்லை," என்று அவர் மேலும் கூறுகிறார்.

பல கட்டிடங்கள், நவீன கட்டிடங்கள் கூட, இன்றைய வெப்பநிலை மாறுபாடுகளை பொறுத்து கொள்ளும் வகையில் வடிவமைக்கப்படவில்லை.

இருப்பினும், திட்டமிட்டு கட்டப்பட்ட கட்டடங்கள் பழைய கட்டமைப்புகளை விட சிறப்பாக சிக்கல்களைச் சமாளிக்கும் என்று ரோட்டா லோரியா கூறுகிறார். உதாரணமாக ஐரோப்பாவின் சில பகுதிகளில், சரியான திட்டமிடலின் மூலம் கட்டப்பட்டுள்ள கட்டடங்கள் இன்னும் தொடர்ந்து நல்ல நிலையில் இருக்கின்றன.



ஒவ்வொரு நகரத்திற்கும் தனிப்பட்ட முறையில், மதிப்பீடு மற்றும் கூடுதல் ஆய்வுகள் தேவைப்படுகின்றன. ஆனால் லத்தீன் அமெரிக்காவைப் பொறுத்தவரை, ரோட்டா லோரியா கூறும் போது, "அடர்த்தியான நகரங்கள், நிலையற்ற மற்றும் மென்மையான நிலத்தில், நிலத்தடி காலநிலை மாற்றத்தின் விளைவாக சேதமடையும்," என்று சுட்டிக்காட்டுகிறார்.

ரோட்டா லோரியாவின் குழுவின் ஆராய்ச்சி முடிவுகளின்படி, அதிக வெப்பம் காரணமாக பூமியின் மேற்பரப்புக்குக் கீழே உள்ள மண் 10 மில்லி மீட்டருக்கும் அதிகமாக மேல் நோக்கி விரிவடையும் என்பது மட்டுமின்றி ஒரு கட்டடத்தின் எடை காரணமாக அது 8 மில்லி மீட் டர் வரை கீழ் நோக்கி நகரும் எனத்தெரியவருகிறது.

இது சாதாரணமாகத் தோன்றினாலும், பல கட்டடக் கூறுகள் மற்றும் அடித்தள அமைப்புகள் அவற்றின் செயல்பாட்டுத் தேவைகளை எதிர்கொள்ள முடியாத நிலையை ஏற்படுத்தும்.

புதிய கட்டுமானங்கள் இந்த ஆபத்தைக் கணக்கில் கொண்டு, அதற்கேற்றவாறு இப்போதே கட்டடங்களை வடிவமைக்க வேண்டும் என்றும், அதனால் இது போன்ற ஆபத்துகளை நீண்ட காலத்துக்கு குறைக்கலாம் என்றும் ரோட்டா லோரியா கூறுகிறார்.

தற்போதுள்ள கட்டடங்களில் சில விஷேசமான செயல்முறைகள் மூலம், தரைக்குள் செல்லும் வெப்பத்தைக் குறைப்பது சாத்தியம் என்றும் அவர் கூறுகிறார்.

இது மட்டுமின்றி, இந்த வெப்பமயமாதலைச் சரியான முறையில் பயன்படுத்தினால் அதை பொதுமக்களுக்குத் தேவையான சக்தியாக மாற்ற முடியும் என்றும் அவர் கூறுகிறார்.

"வெப்பத்தைச் சேகரித்து கட்டிடங்களுக்குப் பயன்படும் ஆற்றலாக அதை மாற்றுவதற்கான புவிவெப்பத் தொழில்நுட்பங்கள் உள்ளன. அவற்றைப் பயன்படுத்தினால், நிச்சயமாக தேவையை ஈடுசெய்ய போதுமான ஆற்றல் கிடைக்கும்," என்று ஆராய்ச்சியாளர் விளக்குகிறார்.

அமெரிக்காவின் சிகாகோ நகரம் மற்றும் அதன் சுற்றுப்புறங்களில் 150க்கும் மேற்பட்ட வெப்பநிலை உணரிகளின் வயர்லெஸ் நெட்வொர்க்கை நார்த்வெஸ்டர்ன் பல்கலைக் கழக ஆராய்ச்சிக் குழு நிறுவியது.

இந்த நெட்வொர்க்கின் மூலம் கிடைக்கும் தரவுகளை ஒப்பிடுவதற்காக, கட்டடங்களே இல்லாத ஒரு தொலைதூரப்பகுதியில் உள்ள கிரான்ட் பார்க்கிலும் ஒரு வெப்பநிலை உணரியை ஆராய்ச்சிக் குழுவினர் நிறுவினர்.

இந்த இரண்டு தரவுகளையும் ஒப்பிட்டபோது, சிகாகோ பெருநகரத்தின் நிலத்தடி வெப்பநிலை கிரான்ட் பார்க்கில் இருந்ததை விட 10 டிகிரி வரை அதிகமாக இருந்ததாகத் தெரியவந்தது.

"நாங்கள் சிகாகோவை எங்களது நேரடி ஆய்வகமாகப் பயன்படுத்துகிறோம். ஆனால் நிலத்தடி வெப்பநிலை மாற்றம் உலகெங்கிலும் உள்ள அனைத்து அடர்த்தியான நகர்ப்புறங்களுக்கும் பொதுவானது," என்று ரோட்டா லோரியா கூறுகிறார்.

இந்நிலையில், உலகம் முழுவதும் உள்ள அடர்த்திமிக்க ஒவ்வொரு நகரையும் தனித்தனியாக மதிப்பிடுவதற்குத் தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்று அவர் கூறுகிறார்.

●

# அண்ணாமலை மீது அமித் ஷா நம்பிக்கை வைப்பது ஏன்?
# அவர் அப்படி என்ன சாதித்தார்?



முருகேஷ் மாடக்கண்ணு

'என் மண் என் மக்கள்' என்ற பெயரில் தமிழக பாஜக தலைவர் அண்ணாமலை நடைபயணத்தைத் தொடங்கியுள்ளார்.

வரப்போகும் 2024ஆம் ஆண்டு நடைபெறவுள்ள மக்களவைத் தேர்தலை முன்னிட்டு மத்திய அரசின் சாதனைகளை தமிழ்நாட்டு மக்களிடம் எடுத்துச் செல்வதற்காக இந்த நடைபயணம் மேற்கொள்ளப்படுவதாக பாஜக தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நடைபயணம் 168 நாட்களுக்கு மொத்தம் 5 பகுதிகளாக தமிழ்நாட்டில் மேற்கொள்ளப்படுகிறது. 234 தொகுதிகளிலும் திட்டமிடப்பட்டுள்ள இந்த நடைபயணத்தில் முக்கிய நகரங்களில் பொதுக்கூட்டங்கள் போன்றவற்றுக்கும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.

என் மண் என் மக்கள் நடைபயணத்தின் தொடக்க விழா ராதநாதபுரம் மாவட்டம், ராமேஸ்வரத்தில் சனியன்று நடைபெற்றது.

அதில் மத்திய உள்துறை அமைச்சர் அமித் ஷா கலந்துகொண்டு நடைபயணத்தைத் தொடங்கி வைத்ததோடு அவரும் நடைபயணம் மேற்கொண்டார்.

அப்போதைய அமித் ஷாவின் பேச்சில் அண்ணாமலை மீது அவர் வைத்திருக்கும் அபார நம்பிக்கை வெளிப்பட்டது.

அண்ணாமலை தலைமையில் தமிழ்நாடு பாஜகவில் கட்சிக்கு உள்ளும் சரி கூட்டணியிலும் சரி பல்வேறு சர்ச்சைகளும் குற்றச்சாட்டுகளும் எழுந்த நிலையிலும் அமித் ஷா அவர் மீது பெரியளவில் நம்பிக்கை வைக்க என்ன காரணம்? அண்ணாமலையின் இந்த நடைபயணம் தமிழக அரசியலில் புயலை கிளப்புமா?

**திமுக ஆட்சியை விமர்சித்த அமித் ஷா**

நடைபயணம் தொடங்குவதற்கு முன்னதாக நடை





பெற்ற தொடக்க விழாவில் பேசிய தமிழக பாஜக தலைவர் அண்ணாமலை, 'பிரதமர் மோதி ஒரு சாமானியன். தற்போது இந்தியாவில் சாமானியர்களுக்கான சாமானியர்களின் ஆட்சி நடக்கிறது.

குஜராத்தில் இருந்து வந்த ஒரு சாமானியன் இந்த 9 ஆண்டுகளில் இந்திய மக்களை பெருமைப்படுத்தி இருக்கிறார். பாரததாய் விழித்து எழுந்திருக்கிறார். ஆனால் தமிழ் தாய் விழித்து எழுந்து விட்டாளா என்பதுதான் தற்போதைய கேள்வி.

ஒரு சாமானியன் இந்த அரசில் பங்கேற்க முடியும் என்ற நிலைமை தமிழகத்தில் உள்ளதா என்றால் இல்லை.

தமிழகத்தில் நடக்கும் அரசு என்பது ஒரு குடும்பம் சார்ந்து அவர்களுக்காக கொள்ளையடிக்க வேண்டும் என்பதற்காக ச் செயல்படும் அரசு இயந் திரமாக இருக்கிறது," என்று கூறினார்.

மேலும், தமிழகத்தில் அர சியல் மாற்றத்தை இந்த யாத் திரை ஏற்படுத்தும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

**பாத யாத்திரையை "பாவ யாத்திரை" என விமர்சித்த முதல்வர்**

அமித் ஷா திமுக ஆட்சியையும் மு.க.ஸ்டாலின் குறித்தும் பல்வேறு விமர்சனங்களை முன்வைத்த நிலையில், மறுநாள் மு.க.ஸ்டாலின் திமுக இளைஞர் அணி மாவட்ட, மாநில, மாநகர அமைப்பாளர், துணை அமைப்பாளர்கள் கூட்டத்தில் அண்ணாமலையின் பாத யாத்திரையை விமர்சித்துப் பேசியுள்ளார்.

அதில் பேசியவர், "பாஜக நடத்துவது பாத யாத்திரை அல்ல, பாவ யாத்திரை" என்று கடுமையாக விமர்சித்தார்.

மேலும், "பாத யாத்திரையை தொடங்கி வைக்க உள்துறை அமைச்சர் அமித் ஷா தமிழகம் வந்தார். பாஜக நடத்துவது பாத யாத்திரை அல்ல," என்று குறிப்பிட்டவர், "குஜராத்தில் 2002ஆம் ஆண்டில் நடந்தவற்றுக்கும் தற்போது மணிப்பூரில் நடந்து கொண்டிருப்பதற்கும் மன்னிப்பு கேட்கும் பாவ யாத்திரை," என்று கூறினார்.

**செந்தில் பாலாஜி அமைச்சராக தொடரலாமா?**

நடைபயணத்தின் தொடக்கவிழாவில் பேசிய அமித் ஷா, 'எம்ஜிஆர், ஜெயலலிதாவின் ஏழைகளுக்கான நலத் திட்டங்களை இந்த பயணம் மீண்டும் கொண்டு வரும்.

தமிழகத்தில் குடும்ப ஆட்சியை ஒழிக்கவும், ஊழலில் இருந்து தமிழகத்தை விடுவிக்கவும், சட்டம் ஒழுங்கை சீர்படுத்தவும் இந்த நடைபயணம் மேற்கொள்ளப்படுகி றது," என்றார்.

தொடர்ந்து பேசிய அமித் ஷா, 'நாட்டிலேயே ஊழல் மிகுந்த அரசு என்றால் அது திமுக அரசுதான். அமலாக் கத்துறையால் ஊழல் வழக்கில் அமைச்சர் ஒருவர் கைதாகி சிறையில் இருக்கிறார்.

**சிறையில் இருப்பவர் அமைச்சராக நீடிக்கலாமா?**

கைதாகி சிறையில் இருக்கும் அமைச்சரிடம் ராஜி னாமா செய்யும்படி முதலமைச்சர் கூறமாட்டார். ராஜினாமா கடிதத்தை வாங்கினால், அவர் எல்லா ரகசியத்தையும் வெளியே சொல்லிவிடுவார் என்பது முதல்வர் ஸ்டாலினுக்கு தெரியும்," என விமர்சித்தார்.

**அண்ணாமலையின் ட்வீட்டால் ஆட்சியில் பூகம்பம்**

மேலும், 'அண்ணாமலை ஒரு ட்வீட் போட்டாலே திமுக ஆட்சிக்கு பூகம்பம் ஏற்படுகிறது. அப்படியென்றால், இந்த நடைபயணத்தின் முடிவில் என்ன ஆகும்?

சோனியா காந்திக்கு ராகுல் காந்தியை பிரதமராக்க வேண்டும் என ஆசை. ஸ்டாலினுக்கு உதயநிதி ஸ்டாலினை முதலமைச்சராக்க வேண்டும் என்று விருப்பம்.

லாலு பிரசாத் யாதவுக்கு பிகாரில் தனது மகன் தேஜஸ்வி யாதவை முதலமைச்சராக்க வேண்டும் என ஆசை. மேற்கு வங்கத்தில் மம்தா பானர்ஜிக்கு தனது மருமகனை முதலமைச்சராக்க ஆசை. மகாராஷ்டிராவில் உத்தவ் தாக்ரேவிற்கு தனது மகனை முதலமைச்சராக ஆசை.

அவர்கள் நாட்டையோ, தமிழ்நட்டையோ வலுப்படுத்த விரும்பவில்லை, தனது குடும்ப உறுப்பினர்களை வளப்படுத்தவே விரும்புகிறார்கள். தமிழ்நாட்டில் உள்ள ஊழல் மற்றும் குடும்ப ஆட்சிக்கு இந்த நடைபயணம் முடிவுகட்டும்," என்றும் அமித்ஷா பேசியிருந்தார்.

**அண்ணாமலை மீது முழு நம்பிக்கை**

இரண்டு மாதங்களுக்கு முன்னர் அதிமுகவின் மறைந்த முதலமைச்சர் ஜெயலலிதா குறித்து அண்ணாமலை நாளிதழ் ஒன்றுக்குக் கொடுத்த பேட்டி இரு கட்சிகளுக்கும் இடையே விரிசலை ஏற்படுத்தியது.

(10ஆம் பக்கம் பார்க்க)

# அண்ணாமலை மீது அமித் ஷா...

(09ஆம் பக்கத் தொடர்ச்சி)

அதிமுக தலைவர்கள் பலரும் அண்ணாமலையை விமர்சித்திருந்தனர். அதிமுக மாவட்ட செயலாளர்கள் கூட்டத்தில், அண்ணாமலைக்கு எதிராக தீர்மானம் நிறை வேற்றப்பட்டது.

ஏற்கெனவே, பாஜகவை சேர்ந்த ஒருசிலர் அண்ணா மலை மீது அதிருப்தி தெரிவித்து அந்தக் கட்சியில் இருந்து விலகியது, உட்கட்சியில் அண்ணாமலை மீது எதிர்ப்பு அலை இருப்பதாகச் சொல்லப்படுவது போன்ற சூழல் நிலவுகிறது. இதனுடன் சேர்த்து அதிமுகவுடனான அண்ணாமலையின் போக்கும் அவருக்கு கட்சியில் பாதிப்பை ஏற்படுத்தும் என்று பேசப்பட்டது.

ஆனால், இந்த சர்ச்சைகளுக்கு நடுவில் தமிழகம் வந்திருந்த அமித் ஷா, அண்ணாமலையை வெகுவாகப் புகழ்ந்து பேசியிருந்திருந்தார்.

வேலூரில் நடைபெற்ற பாஜக சாதனை விளக்க பொதுக் கூட்டத்தில், ‘என் அன்புத் தம்பி அண்ணாமலை பட்டி தொட்டியெங்கும் பெயர் எடுத்துள்ளார்,” என்று கூறிய ததோடு அண்ணாமலையின் செயல்பாடுகள் சிறப்பாக உள்ளதாகவும், அவர் மீது முழு நம்பிக்கை உள்ளதாகவும் பாராட்டி இருந்தார்.

இதேபோல், சென்னை தாம்பரத்தில் கடந்த ஜூன் மாதம் நடைபெற்ற பாஜகவின் 9 ஆண்டுகால ஆட்சியின் சாதனை விளக்க பொதுக்கூட்டத்தில் பேசிய மத்திய அமைச்சர் ராஜ்நாத் சிங், ‘நான் நீண்ட நாட்களாக அரசி யலில் இருக்கிறேன். ஒருவரை பார்த்தாலே அவரைப் பற்றிக் கூறிவிட முடியும். அண்ணாமலை தமிழ்நாட் டுக்கு மட்டும் தலைவர் அல்ல மொத்த இந்தியாவுக்கும் தலைவராக வருவார்,” என்று கூறினார்.

### அண்ணாமலையின் அணுகுமுறை மேலிடத்திற்கு பிடித்துள்ளதா?

பாஜகவின் மேலிடம் இந்த அளவுக்கு அண்ணாம லைக்கு முக்கியத்துவம் தருவது ஏன், தற்போது அவர் தொடங்கியுள்ள நடைபயணம் எந்த அளவுக்கு பலன் தரும் என்று மூத்த ஊடகவியலாளர்களிடம் பேசினோம்.

“பாஜக தொடங்கி பல ஆண்டுகள் ஆனாலும் 2014ஆம் ஆண்டில் மத்தியில் ஆட்சிக்கு வந்த பிறகுதான் தமிழ் நாட்டில் கவனம் பெறத் தொடங்கியது. இதற்கு முன்பு தமிழக பாஜகவில் பலர் தலைவராக இருந்துள்ளனர்.

இருப்பினும், பிற கட்சிகள் மீது ஊழல் புகார் கொடுப்



பது போன்றவற்றில் அவர்கள் ஈடுபட்டது இல்லை. இதை அண்ணாமலை துணிந்து செய்கிறார். அவர் குற்றச் சாட்டில் உண்மை இருக்கிறதா இல்லையா என்பது காலப்போக்கில்தான் தெரியவரும்,” என்கிறார் மூத்த ஊடகவியலாளர் ப்ரியன்.

தமிழ்நாட்டில் பாஜக என்ற கட்சி இருக்கிறது என்ப தற்கான தோற்றத்தை அண்ணாமலை ஏற்படுத்துவதாகக் கூறிய ப்ரியன், திராவிட கட்சிகள் மீது கடும் ஊழல் குற்றச்சாட்டுகளைக் கூறும் அவரது அணுகுமுறை பாஜக தலைமைக்கு பிடித்துள்ளது என்றும் விளக்கினார்.

அதனால்தான் ‘அண்ணாமலை மீது புகார்கள் கூறப் பட்டாலும் தொடர்ந்து அவருக்கு பாஜக தலைமை ஆதரவாக இருக்கிறது,” என்றும் ப்ரியன் தெரிவித்தார்.

‘மூன்றாவது முறையாக பிரதமர் வேட்பாளராக நரேந்திர மோதி முன்னிலைப்படுத்தப்படும் சூழலில் தமிழகத்தில் அண்ணாமலை அவருக்கு ஒரு கூடுதல் பல மாகப் பார்க்கப்படுகிறார்.

உள்ளாட்சித் தேர்தலில் பாஜக 1.5 சதவீதம் வாக்கு பெறும் என்ற எண்ணம் நிலவியபோது அதை 5 சதவீத மாக அண்ணாமலை உயர்த்தினார்.

அந்த அளவுக்கு கட்சிக்கு சாதகமாக இருக்கும் அண் ணாமலையை எந்தச் சூழ்நிலையிலும் விட்டுகொடுப்ப தற்கு டெல்லி தலைமை தயாராக இல்லை,” என்கிறார் மூத்த பத்திரிகையாளர் ரவீந்திரன் துரைசாமி.

மேலும், 2024 மக்களவை தேர்தலுக்குப் பிறகு மிகப் பெரிய பதவியையும் பாஜக தலைமை அவருக்குத் தரக் கூடும் என்றும் அவர் கூறுகிறார்.

“மக்களவைத் தேர்தலுக்கான இடப் பங்கீட்டில் அதி முகவிடம் இருந்து இரட்டை இலக்க இடங்களைப் பெற்றுவிட்டாலே அண்ணாமலைக்கு வெற்றிதான்.

அதற்கு இந்த நடைபயணம் உதவுமா என்பதைப் பொறுத்திருந்து பார்க்க வேண்டும். அதேநேரத்தில் எடப்பாடி பழனிசாமியும் அவ்வளவு சீக்கிரத்தில் இடங்களை விட்டுக்கொடுக்க மாட்டார். எனவே, இடப் பங்கீடு, கூட்டணி போன்றவற்றை வைத்தே அண்ணாம லையின் முயற்சி வெற்றியா தோல்வியா என்பதைப் பார்க்க முடியும்,” என்றார் ரவீந்திரன் துரைசாமி.

### 2024 தேர்தல் முடிவு - அண்ணாமலைக்கு பலப்பரீட்சை

அண்ணாமலையின் நடைபயணம் பலனளிக்குமா என்பதை 2024 தேர்தல் முடிவுகள் மூலம்தான் தெரிந்து கொள்ள முடியும் என்று கூறுகிறார் ஊடகவியலாளர் ப்ரியன்.

“எல்.முருகன் தமிழக பாஜக தலைவராக இருந்தபோது வேல்யாத்திரை என்ற பெயரில் நடைபயணம் மேற்கொண் டார். அதுவும் குறிப்பிட்ட இடங்களில் மட்டுமே நடை பெற்றது. அதேபோல் தற்போது பாஜக திட்டமிட்டுள் ளதையும் முழு நடைபயணம் என்று கூறிவிட முடியாது. சில இடங்களில் அது பேருந்து பயணமாகத் திட்டமி டப்பட்டுள்ளது.

மேலும் அமித் ஷா கலந்துகொண்ட நடைபயணத் தின் தொடக்க விழாவில் பிரதான கூட்டணி கட்சியான அதிமுக சார்பில் எடப்பாடி பழனிசாமி பங்கேற்கவில்லை.

தேமுதிக சார்பில் முக்கிய தலைவர்கள் யாரும் கலந்து கொள்ளவில்லை. இதுதான் அண்ணாமலை தலைமையி லான தமிழக பாஜகவுக்கு அவர்கள் கொடுக்கும் முக்கியத் துவம்.

சமூக ஊடகங்களில் பாஜக தீவிரமாக இயங்கி வருகி றது. சமூக ஊடகங்களில் இருக்கும் பாஜகவை தனது நடைபயணத்தின் மூலம் சமூகத்திற்கு இடையேயும் அண்ணாமலை கொண்டு செல்வாரா என்பதற்கு 2024 மக்களவை தேர்தலில் தமிழ்நாட்டில் கிடைக்கும் ரிசல்ட் மூலம்தான் பதில் கிடைக்கும்,” என்றார்.

●






# வவுணதீவில் காட்டு யானைகள் தொல்லையால் தென்னை செய்கையாளர்கள் பெரிதும் பாதிப்பு!





மட்டக்களப்பு, ஓக. 02

**மட்டக்களப்பு வவுணதீவு பிரதேச செயலக பிரிவில் அண்மைக் காலமாக உப உணவு மற்றும் தென்னை பயிர்ச்செய்கையாளர்கள் காட்டு யானைகள் தொல்லைகளினால் பெரும் பாதிப்புக்குள்ளாகியிருப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.**

இதற்கமைய நேற்று முன் தினம் இரவு வவுணதீவு பிரதேச செயலாளர் பிரிவின் இருட்டுச் சோலைமடு பகுதியில் காட்டு யானை தென்னந்தோட்டங்களில் உட்புகுந்து தென்னை மரச் செய்கையை பெரிதும் நாசப்படுத்தியுள்ளதாக இப் பகுதி விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.

சுமார் ஐந்து வருடங்களாக வளர்த்தெடுக்கப்பட்ட இந்த தென்னை மரங்களை காட்டு யானை ஒரே இரவில் அளித்து நாசமாக்கி பெரும் நட்டத்தினை உண்டாக்கியிருப்பதாக தெரிவிக்கும் இந்த விவசாயிகள், இத்தகைய பெரும் நட்டங்களுக்கு உதவுவதற்கு அரசாங்க அதிகாரிகள் முன் வரவேண்டுமென்றும் கோரிக்கை விடுக்கின்றனர்.

தாம் பெரும் நட்டத்தை அடைந்துள்ளபோதிலும் இதற்கு ஏதாவது உதவிகள் வழங்க முன்வராவிட்டால் நாட்டுக்கு வருமானத்தை தேடி தரக்கூடிய இந்த தென்னை பயிர்செய்கையில் ஈடுபடாது வெளிநாடுகளுக்கு தொழில் வாய்ப்பை நாடவேண்டி வருமென்றும் கவலை தெரிவிக்கின்றனர்.

(அ)

# தமிழ்ச்சங்கத்தின் பெயர்ப்பலகை களுவாஞ்சிக்குடியில் திறந்துவைப்பு

## தொண்டமான் விருது சிவலிங்கத்திற்கு






மட்டக்களப்பு, ஓக. 02

மட்டக்களப்புத் தமிழ்ச்சங்கத்திற்குச் சொந்தமான களுவாஞ்சிக்குடிக் காணியில் தமிழ்ச்சங்க பெயர்ப்பலகை தமிழ்ச்சங்கத் தலைவர் சைவப்புரவலர் வி.ரஞ்சிதமூர்த்தி தலைமையில் நேற்று உத்தியோகபூர்வமாக திறந்து வைக்கப்பட்டது.

மட்டக்களப்புத் தமிழ்ச்சங்கத்தின் வரலாறும் தமிழ்ச்சங்கத்திற்கு சொந்தமான காணி பற்றிய வரலாற்றுத்தகவல்களும் மிகவும் தெளிவான வகையில் சபையோருக்கு தலைவரினால் எடுத்துரைக்கப்பட்டது.

அதேவேளை,

அமரர் ஆறுமுகம் தொண்டமானின் ஜனன சிரார்த்த தின ஞாபகார்த்தக் கட்டுரை மற்றும் கவிதைப் போட்டியில் பங்கு பற்றி பரிசுபெற்ற மட்டக்களப்புத் தமிழ்ச்சங்கத்தின் செயற்குழு உறுப்பினர் கலாபூசணம் கா. சிவலிங்கத்தை மட்டக்களப்புத் தமிழ்ச்சங்கத்தால் கௌரவிக்கும் நிகழ்வு இடம்பெற்றது.



மட்டக்களப்புத் தமிழ்ச்சங்க பொதுச்செயலாளர் சட்டத்தரணி மு.கணேசராசா உரையாற்றியதைத் தொடர்ந்து சங்கத்தின் எதிர்காலச் செயற்பாடுகள் சார்ந்த கருத்துக்கள் தமிழ்ச்சங்கத்திற்கு சொந்தமான களுவாஞ்சிக்குடி காணியை பராமரித்தல், வினைத்திறன் கொண்ட செயற்பாட்டிற்கு அதனை எவ்வாறு பயன்படுத்தல் என்பன தொடர்பான கருத்துக்கள் செயற்குழு உறுப்பினர்களால் முன்வைக்கப்பட்டு கலந்துரையாடப்பட்டன.

அவ்வகையில் குறித்த காணியில் தமிழ்ச்சங்கச் செயற்பாட்டின் இயங்குநிலைக்காக சபையோரால் குழு ஒன்று தெரிவு செய்யப்பட்டு பொறுப்புக்கள் ஒப்படைக்கப்பட்டன. (அ)



# போதை பாவனைத் தடுப்பு விழிப்புணர்வு செயற்பாடு

திருமலை, ஓக. 02

தம்பலகாமம் பிரதேச செயலகத்துக்குட்பட்ட சிராஜ்நகர் கிராம சேவகர் பிரிவில் வசிக்கும் இளைஞர்களுக்கான போதைப்பொருள் பாவனைத் தடுப்பு தொடர்பில் விழிப்புணர்வு நிகழ்வு கடந்த திங்கட்கிழமை இடம்பெற்றது.

தம்பலகாமம் பிரதேச செயலாளர் ஜெ.ஸ்ரீபதியின் வழிகாட்டுதலுக்கிணங்க இடம் பெற்ற குறித்த விழிப்புணர்வானது இளைஞர் சேவை அதிகாரி ஜாபிர் ஏற்பாட்டில் இடம் பெற்றதுடன்

சமுதாய சீர்திருத்த அபிவிருத்தி உத்தியோகத்தர் பா.ஹம் சபாலன் வளவாளராக கலந்து கொண்டார். இதன் போது போதைப்பொருள் தடுப்பு தொடர்பாக நாடக செயற்பாடும், ஆலோசனை வழிகாட்டலும் இடம் பெற்றது. (அ)



# கிழக்கு மாகாண ஆளுநருடன் அவுஸ்திரேலிய தூதுவர் பேச்சு

திருமலை, ஓக. 02

கிழக்கு மாகாணத்தின் அபிவிருத்தி தொடர்பில் தூதுவர் லலிதா கபூர் ஆகியோருடன் கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமானை சந்தித்து கலந்துரையாடலில் ஈடுபட்டார்.

இதன்போது கிழக்கு மாகாணத்தில் சுற்றுலா, நீர்வாழ் கலாசாரம், கனிய மணல், புதுப்பிக்கத்தக்க ஆற்றல் மற்றும் பசுமை நைதரசன் துறை மற்றும் இலங்கையின் பொருளாதாரத்திற்கு ஆதரவளிக்க அவுஸ்திரேலிய அரசாங்கம் தனது ஆர்வத்தை வெளிப்படுத்தியுள்ளது. (அ)



# தொழில்நுட்பக்கல்லூரி பிரிவுத் தலைவர் ரவீந்திரனுக்கு சேவைநலன் பாராட்டுவிழா!

காரைதீவு, ஓக. 02

சம்மாந்துறை தொழில்நுட்பக் கல்லூரியில் விவசாயம் மற்றும் தொழில்துறை பிரிவின் தலைவரும் இலங்கை தொழிநுட்ப கல்வி சேவை உத்தியோகத்தருமான சாமித்தம்பி ரவீந்திரனுக்கு நேற்று முன் தினம்(31) சேவை நலன்பாராட்டு விழா இடம்பெற்றது.

காரைதீவைச் சேர்ந்த சாமித்தம்பி ரவீந்திரன் தனது 18 வருட சேவையின் பின்பு 60 ஆவது வயதில் நேற்று முன்தினம் ஓய்வு பெற்றார் .

அதனையொட்டி தொழில்நுட்ப கல்லூரி அதிபர் சதாசிவம் தியாகராஜா தலைமையில் சேவை நலன் பாராட்டு விழா தொழில்நுட்ப கல்லூரியில் கோலாகலமாக நடைபெற்றது.

ரவீந்திரன் தனது குடும்பத்தினருடன் கலந்து கொண்டார்.

அங்கு அதிபர், விரிவுரையாளர்கள் எனப் பலரும் பாராட்டி பேசியதுடன் அவருக்கு வாழ்த்து மடல் வழங்கி பொன்னாடை போர்த்தி கௌரவித்தார்கள்.

# ஆஸியில் 91 சிறுவர்கள் பாலியல் துஷ்பிரயோகம்!

## சிறுவர் பராமரிப்பு ஊழியர் மீது வழக்கு

கான்பரா, ஓக. 02

அவுஸ்திரேலியாவின் முன்னாள் சிறுவர் பராமரிப்பு ஊழியர் ஒருவர் 91 சிறுவர்களை பாலியல் துஷ்பிரயோகம் செய்ததாக குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

குறித்த 91 சிறுவர்களை பாலியல் துஷ்பிரயோகத்திற்கு உட்படுத்தியதுடன், இந்த சம்பவங்களை காணொளி மூலம் பதிவு செய்திருப்பதாகவும் தெரிவித்து சந்தேநபர் மீது அவுஸ்திரேலிய நீதிமன்றில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

குற்றஞ்சாட்டப்பட்ட சந்தேகநபர் கடந்த 2007 மற்றும் 2022 இற்கு இடைப்பட்ட காலப்பகுதிக்குள் அவுஸ்திரேலியாவிலும், வெளிநாட்டிலும் உள்ள சுமார் 12 குழந்தை பராமரிப்பு நிலையங்களில் பணியாற்றி வந்துள்ளார்.

சந்தேகநபர் பணியாற்றிய சிறுவர் பராமரிப்பு நிலையங்களின் ஊடாக மேற்கொள்ளப்பட்ட முறைப்பாடுகளுக்மைய கடந்த 2014 முதலே சிறுவர் பாலியல் குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் தேடப்பட்டு வந்துள்ளார்.

இந்நிலையில்,கடந்த 2022 ஆகஸ்ட் மாதமளவில் 45 வயதான சந்தேக நபரை பொலிஸார் கைது செய்தனர்.

இருப்பினும் விசாரணைகள் முழுமையாக நிறைவடைவதற்கும், பாதிக்கப்பட்டவர்களை அடையாளம் காண்பதற்கும் ஒரு வருடகாலம் எடுத்ததாக அவுஸ்திரேலிய பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

91 சிறுவர் பாலியல் குற்றச்சாட்டுக்களில், 87 குற்றங்கள் அவுஸ்திரேலியாவிலும், நான்கு குற்றங்கள் வெளிநாடுகளிலும் இடம்பெற்றிருப்பதாக பொலிஸார் சுட்டிகாட்டியுள்ளனர்.

சந்தேகநபர் மீது நீதிமன்றத்தில் 1,623 குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டுள்ளன. இதில் 246 பாலியல் வல்லுறவு குற்றச்சாட்டுகளும், சிறார்களுடன் அநாகரீகமாக நடந்தமை தொடர்பில் 673 குற்றச்சாட்டுகளும் உள்ளடங்கும்.

இதனையடுத்து சந்தேக நபர் மீது வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளதுடன், குறித்த வழக்கு மீதான விசாரணைகள் இம்மாதம் 21ஆம் திகதி இடம்பெறவுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

தாம் கண்ட பயங்கரமான வழக்குகளில் ஒன்று இது என அவுஸ்திரேலிய அதிகாரிகள் கவலை வெளியிட்டுள்ளனர்.



# ஆங் சான் சூகியின் தண்டனை மாற்றம்!

நைபிட்டோ, ஓக. 02

மியன்மார் முன்னாள் தலைவர் ஆங் சான் சூகி மீது அந்நாட்டு இராணுவத்தால் சுமத்தப்பட்ட 19 குற்றச்சாட்டுகளில் ஐந்தில் இருந்து விடுதலை செய்யப்பட்டுள்ளார்.

அதன்படி 33ஆண்டு சிறைத் தண்டனையிலிருந்து 6 ஆண்டுகள் குறைக்கப்பட்டுள்ளது.

இதற்கமைய கடந்த வாரம், ஆங் சான் சூகி சிறையில் இருந்து விடுவிக்கப்பட்டு, தலைநகர் நேபி தாவில் வீட்டுக் காவலில் வைக்கப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (அ)



# ஜப்பானில் கானுன் புயல்; 260 விமானங்கள் இரத்து

ரோக்கியோ, ஓக. 02

ஜப்பானில் தென் பகுதியில் கானுன் புயல் உருவாகியுள்ளது. இந்த புயலின் வேகம் வினாடிக்கு 40 மீட்டர் வேகம் வரை வீசக்கூடும் என அந்நாட்டின் வானிலை மையம் எச்சரித்துள்ளது.

இந்நிலையில், புயல் முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக 264 விமானங்கள் ரத்து செய்யப்பட்டுள்ளன.

குறிப்பாக ஜப்பான் எயார் லைன்ஸ் மற்றும் ஜேஏஎல் விமான சேவைகள் நேற்றைய தினம் 67 விமான சேவைகளையும், "ஏ.என்.ஏ" விமான சேவை நேற்று முன்தினம் 73 விமான சேவைகளையும், நேற்று 124 விமான சேவைகளையும் ரத்து செய்வதாக அறிவித்துள்ளன.

இதன் காரணமாக உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு பயணிகள் கடுமையாக பாதிப்புக்குள்ளாகி இருப்பதாக அந்நாட்டு ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

இதேவேளை, கானுன் புயலினால் கடுமையான மழை பெய்யும் அபாயம் உள்ளதால், தாழ்வான பிரதேசங்களில் வசிப்பவர்களை பாதுகாப்பான இடங்களுக்கு வெளியேறும்படி அறிவுறுத்தப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (அ)

## ஆப்கானிஸ்தானை கைப்பற்றிய பின்

# தலிபான் - அமெரிக்கா முதல் முறையாக பேச்சு

நியூயோர்க், ஓக. 02

தலிபான்கள் ஆப்கானிஸ்தானை கைப்பற்றி ஆட்சியமைத்து இரண்டு வருடங்கள் கடந்துள்ள நிலையில் தலிபான்களுக்கும் அமெரிக்க பிரதிநிதிகளும் இடையில் முக்கிய சந்திப்பொன்று இடம்பெற்றுள்ளதாக சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

குறித்த சந்திப்பில் நாட்டுக்கு அமெரிக்கர்கள் வருவதற்கு விதிக்கப்பட்டுள்ள சுற்றுப்பயணத் தடை உட்பட பல தடைகளை நீக்குவது குறித்தும், வெளிநாடுகளில் உள்ள ஆப்கானிஸ்தானின் மத்திய வங்கிக்கு சொந்தமான சொத்துக்களை திரும்ப பெறுவது குறித்தும் தாலிபான் தரப்பினர் கோரிக்கை விடுத்துள்ளனர்.

மேலும் அமெரிக்க பிரதிநிதிகள் தரப்பில் ஆப்கானிஸ்தானில் நிலவும் மனித உரிமைகள் பிரச்சனை குறித்து கலந்துரையாடப்பட்டது.

ஆப்கானிஸ்தானின் பொருளாதார ஸ்திரத்தன்மைக்காக வேண்டிய உதவிகளை செய்ய அமெரிக்கா தயாராக இருப்பதாகவும் அமெரிக்க பிரதிநிதிகள் தலிபான்களிடம் தெரிவித்துள்ளனர்.

பெண் குழந்தைகளின் கல்வித் தடை, பெண்கள் வேலைக்கு செல்வதற்கான தடை, ஊடகங்களுக்கான தடை மற்றும் பிற மத வழிபாட்டுத் தடை உட்பட தாலிபான் விதித்திருக்கும் பல தடைகள் தொடர்பில் குறித்த சந்திப்பில் அவதானம் செலுத்தப்பட்டது.



இந்த சந்திப்பில் சிறப்பு அமெரிக்க பிரதிநிதி தோமஸ் வெஸ்ட் மற்றும் பெண் குழந்தைகள் மற்றும் பெண்களுக்கான உரிமைகள் மற்றும் மனித உரிமைகளுக்கான தூதர் ரீனா அமிரி ஆகியோர் கலந்து கொண்டனர்.

கடந்த 2022ஆம் ஆண்டு ஆப்கானிஸ்தானில் நிலைக்கொண்டிருந்த தனது படையினரை அமெரிக்கா திரும்ப பெற்றதை அடுத்து தலிபான்கள் நாட்டின் ஆட்சி அதிகாரத்தை கைப்பற்றினர்.

தலிபான்கள் ஆப்கானிஸ்தானில் ஆட்சியை கைப்பற்றியதை தொடர்ந்து, பெண்கள் கல்வி கற்கவும், தொழில் செய்யவும் தடை விதிக்கப்பட்டது.

தலிபான் அரசு ஆட்சியை கைப்பற்றிய உடன் அமெரிக்கா, ஆப்கானிஸ்தானுக்கு மத்திய வங்கியின் பணம் ரூ.57 ஆயிரம் கோடியை நியூயோர்க் வங்கியில் முடக்கி வைத்துள்ளமை குறிப்பிடத் தக்கது. (அ)

# உயரமான கட்டடத்தின் 68ஆவது மாடியிலிருந்து வீழ்ந்து பிரான்ஸ் நாட்டு சாகச வீரர் உயிரிழப்பு!

பாரிஸ், ஓக. 02

பிரான்ஸ் நாட்டை சேர்ந்த ரெமி லுசிடி எனும் 30 வயதானவர் உலகின் பல்வேறு நாடுகளில் உள்ள உயரமான கட்டடங்கள் மற்றும் பாலங்கள் மீது ஏறி சாகசம் செய்து வந்தார்.

இதனால் சமூக வலைத்தளங்களில் அவரை பின்தொடர்பவர்களின் எண்ணிக்கை அதிகரித்திருந்தது.

இந்நிலையில், ரெமி கடந்த வாரம் ஹொங்காங்கில் உள்ள 68 மாடிகளைக் கொண்ட அடுக்குமாடி குடியிருப்பு கட்டடத்திற்கு சென்றுள்ளார்.

அங்குள்ள பாதுகாவலர்களிடம் 40 ஆவது மாடியில் உள்ள தன்னுடைய நண்பரை பார்க்கப் போவதாகக் கூறி உள்ளே சென்றுள்ளார்.

இதுபற்றி, நண்பர் என கூறியவரிடம் பாதுகாவலர்கள் தகவல் தெரிவித்துள்ளனர். ஆனால், ரெமியை தனக்கு தெரியாது என அவர் கூறியுள்ளார். இதை யடுத்து, பாதுகாவலர் ஒருவர் ரெமியை தேடிச் சென்றுள்ளார்.

அதற்குள் கட்டடத்தின் உச்சிக்கு சென்றுவிட்டார் ரெமி. அங்கிருந்து சாகசம் செய்தபோது, தவறி வீழ்ந்ததில் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளார்.

தகவல் அறிந்த பொலிஸார் சம்பவ இடத்திற்கு சென்று அவரது உடலை கைப்பற்றியுள்ளனர். பின்னர் அங்கிருந்த சி.சி.ரி.வி காட்சிகளை ஆய்வு செய்துள்ளனர்.

அதில், கட்டடத்தின் வெளிப்பக்கம் சிக்கிக்கொண்ட ரெமி ஜன்னலை தட்டி உதவி கோருகிறார். அந்த வீட்டில் இருந்தவர்கள் வருவதற்குள் தவறி வீழ்ந்து உயிரிழந்துள்ளார். இந்த சம்பவம் குறித்து பொலிஸார் வழக்கு பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

ரெமி கடைசியாக, ஹொங்கொங்கின் ரைம்ஸ் சதுக்கத்தில் இருந்தபடி எடுத்த தனது புகைப்படத்தை சமூக வலைத்தளத்தில் பகிர்ந்திருந்தார். இதனிடையே, அவரது மரண தகவலைக் கேட்ட சமூக வலைத்தளவாசிகள் அந்த பதிவின் கீழ் இரங்கல் தெரிவித்து வருகின்றனர். (அ)



ஈழநாடு



# இங்கிலாந்து அபார வெற்றி!



ஆஷஸ் டெஸ்ட் தொடரின் ஐந்தாவது மற்றும் இறுதி டெஸ்ட் போட்டியில் இங்கிலாந்து அணி வெற்றி பெற்றது.

இப்போட்டியில் நாணயச் சுழற்சியில் வென்ற அவுஸ்திரேலிய அணி முதலில் பந்துவீச்சை தேர்வு செய்தது.

இதனையடுத்து களமிறங்கிய இங்கிலாந்து அணி முதல் இன்னிங்சில் 283 ஓட்டங்களில் ஆட்டமிழக்க, அவுஸ்திரேலிய அணி முதல் இன்னிங்ஸ் 295 ஓட்டங்கள் எடுத்தது.

12 ஓட்டங்கள் பின்தங்கிய நிலையில், இங்கிலாந்து அணி 2வது இன்னிங்சில் அதிரடியாக விளையாடி ஓட்டங்களை சேர்த்தது.

அந்த அணி 395 ஓட்டங்களை சேர்க்க, அவுஸ்திரேலிய அணிக்கு 384 ஓட்டங்கள் வெற்றி இலக்காக நிர்ணயிக்கப் பட்டது. ஆஸ்திரேலிய அணியின் தொடக்க வீரர் டேவிட் வோர்னர் 60 ஓட்டங்களில் ஆட்டமிழக்க, கவாஜா 72 ஓட்டங்கள் எடுத்தார்.

பின்னர் இங்கிலாந்து பந்து வீச்சாளர்கள் தங்கள் பணியை சரியாக செய்ததால் அவுஸ்திரேலிய அணி 334 ஓட்டங்களுக்கு ஆட்டமிழந்தது.

இதையடுத்து இங்கிலாந்து அணி 49 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

இதன் மூலம் 5 போட்டிகள் கொண்ட தொடரில், இங்கிலாந்து மற்றும் அவுஸ்திரேலிய அணிகள் 2 - 2 என்ற கணக்கில் வென்று சமனில் தொடரை முடித்தன.



# கொழும்பு ஸ்டார்ஸ் 27 ஓட்டங்களால் வெற்றி

நான்காவது லங்கா பிரிமியர் லீக் கிரிக்கெட் தொடரின் மூன்றவது போட்டியில் கொழும்பு ஸ்டார்ஸ் அணி 27 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றிபெற்றது.

நேற்று முன்தினம் நடைபெற்ற குறித்த போட்டியில் கொழும்பு ஸ்டார்ஸ் அணி பி-லவ் கண்டி அணியை எதிர்கொண்டது.

குறித்த போட்டியில் நாணய சுழற்சியில் வெற்றிபெற்ற கொழும்பு ஸ்டார்ஸ் அணி முதலில் துடுப்பாட்டத்தை தெரிவு செய்தது.

அதற்கமைய, 20 ஓவர்களின் நிறைவில் கொழும்பு ஸ்டார்ஸ் அணி ஆறு விக்கெட்கள் இழப்பிற்கு 157 ஓட்டங்களை பெற்றது.

கொழும்பு ஸ்டார்ஸ் அணி சார்பில், பாபர் அசாம் 59 ஓட்டங்களையும் நுவனிது பெர்னாண்டோ 28 ஓட்டங்களையும் பத்தும் நிஸ்ஸங்க 15ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்து வீச்சில் பி-லவ் கண்டி அணி சார்பில் இசுரு உதான மூன்று விக்கெட்டுகளையும் முஹம்மது ஹஸ்னைன் இரண்டு விக்கெட்டுகளையும் கைப்பற்றினர்

அதன்படி, 158 என்ற வெற்றி இலக்குடன் களமிறங்கிய பி-லவ் கண்டி அணி 20 ஓவர்களின் நிறைவில் எட்டு விக்கெட்டுகள் இழப்பிற்கு 130 ஓட்டங்களை பெற்றது.

பி-லவ் கண்டி அணி சார்பில் ஏஞ்சலோ மேத்யூஸ் 25 ஓட்டங்களையும் சர்பராஸ் அகமது 16 ஓட்டங்களையும் கமிந்து மெண்டிஸ் 15 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்து வீச்சில் கொழும்பு ஸ்டார்ஸ் அணி சார்பில் மதீஷ பத்திரன மூன்று விக்கெட்டுகளையும் நசீம் ஷா மற்றும் ஜெப்ரி வாண்டர்சே தலா இரண்டு விக்கெட்டுகளை கைப்பற்றினர்.

போட்டியின் நிறைவில் ஆட்ட நாயகன் விருதை கொழும்பு ஸ்டார்ஸ் அணி வீரர் பாபர் அசாம் கைப்பற்றினார்



# மாகாண கராத்தே போட்டியில் மகாதேவா இல்லம் சாதனை

2023 இற்கான இலங்கை கராத்தேதோ சம்மேளனத்தின் ஏற்பாட்டில் நடைப்பெற்ற வட மாகாணத்திற்கான கராத்தே சுற்றுப்போட்டியில் கிளி நொச்சி மகாதேவா சிறுவர் இல்ல மாணவர்கள் 74 பதங்கங்களை பெற்று சாதனை படைத்துள்ளனர்.

கடந்த வாரம் கிளிநொச்சி மாவட்ட பொது உள்ளக விளையாட்டு அரங்கில் நடைபெற்றது. இப்போட்டியில் கலந்து கொண்ட மகாதேவா சுவாமிகள் சிறுவர் இல்ல

மாணவர்கள் 33 தங்கம், 22 வெள்ளி, 19 வெண்கலப்பதக்கங்கள் பெற்று மாவட்டத்திற்கும் இல்லத்திற்கும் பெருமை சேர்த்துள்ளனர். (அ)

# இந்தியாவுக்கு எதிரான 20/20 தொடர்: மேற்கிந்திய தீவுகள் அணி அறிவிப்பு

இந்தியா மற்றும் மேற்கிந்திய தீவுகள் அணிகளுக்கு இடையில் நடைபெறவுள்ள ஐந்து இருபதுக்கு இருபது போட்டிகளுக்கான மேற்கிந்திய தீவுகள் அணி அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்தியா மற்றும் மேற்கிந்திய தீவுகள் அணிகளுக்கு இடையில் நடைபெறவுள்ள ஐந்து இருபதுக்கு இருபது போட்டி எதிர்வரும் மூன்றாம் திகதி ஆரம்பமாகவுள்ளது.

குறித்த போட்டியில், ரோவ்மேன் பவல் தலைமையில் கெய்ல் மேயர்ஸ், நிக்கோலஸ் பூரன், ஜான்சன் சார்லஸ், ரோஸ்டன் சேஸ், ஹெட்மயர், ஜேசன் ஹோல்டர், ஷாய் ஹோப், அகீல் உசேன், அல் ஜாரி ஜோசப், பிரன்டன் கிங்,



மெக்காய், ரோமரியோ ஷெப்பர்டு, ஒடியன் சுமித் மற்றும் ஒஷானே தாமஸ் ஆகியோர் உள்ளடங்கிய மேற்கிந்திய தீவுகள் அணி அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்தியா அணி மேற்கிந்திய தீவிற்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டு இரண்டு டெஸ்ட் போட்டிகள், மூன்று ஒருநாள் போட்டிகள், ஐந்து இருபதுக்கு இருபது போட்டிகள் கொண்ட தொடரில் விளையாடி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# பும்ரா தலைமையில் இந்திய அணி அறிவிப்பு

இந்தியா மற்றும் அயர்லாந்து அணிகளுக்கு இடையிலான மூன்று போட்டிகள் கொண்ட இருபதுக்கு இருபது கிரிக்கெட் தொடரின் இந்தியா அணியின் தலைவராக ஜஸ் பிரித் பும்ரா நியமிக்கப்பட்டுள்ளார்.

இந்திய மற்றும் அயர்லாந்து அணிகளுக்கு இடையிலான மூன்று போட்டிகள் கொண்ட இருபதுக்கு இருபது கிரிக்கெட் தொடர் எதிர்வரும் 18ம் திகதி ஆரம்பமாகவுள்ளது.

இந்நிலையில், ஜஸ்பிரித் பும்ரா தலைமையிலான இந்திய அணியை இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டு வாரியம் அறிவித்துள்ளது.

அதற்கமைய, ஜஸ்பிரித் பும்ரா தலைமையில், ருதுராஜ் கெய்க்வாட் ) யஷஸ்வி ஜெய்ஸ்வால், திலக் வர்மா, ரிங்கு சிங், சஞ்சு சாம்சன் , ஜிதேஷ் சர்மா, ஷிவம் துபே, வாஷிங்டன் சுந்தர், ஷபாஸ் அகமது, ரவி பிஷ்னோய், பிரசித் கிருஷ்ணா, அர்ஷ்தீப் சிங், முகேஷ் குமார் மற்றும் ஆவேஷ்கான் உள்ளடங்கிய இந்திய அணி அறிவிக்கப்பட்டுள்ளது.



# ஆசிய கிண்ணத்துக்கு முன்னதாக இலங்கையில் ஆப்கானிஸ்தான் - பாகிஸ்தான் அணிகள் மோதல்

ஆசிய கிண்ண தொடருக்கு முன்னதாக ஆப்கானிஸ்தானுக்கு எதிரான 3 போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடர் இலங்கையில் நடைபெறும் என பாகிஸ்தான் கிரிக்கெட் சபை அறிவித்துள்ளது.

அம்பாந்தோட்டை மற்றும் கொழும்பில் நடைபெற உள்ள இந்த மூன்று போட்டிகள் ஆசிய கிண்ண தொடர் தொடங்குவதற்கு நான்கு நாட்களுக்கு முன்னதாக எதிர்வரும் 26 அன்று முடிவடைகிறது.

ஆசிய கிண்ண போட்டிகளில் விளையாடவுள்ள பாகிஸ்தான் அணிக்கு இந்த தொடர் சிறந்த அடித்தளமாக அமையும் என எதிர்பார்க்கப் படுகின்றது.

இதேவேளை மிகவும் எதிர்பார்க்கப்பட்ட ஆடவர் ஆசியக் கிண்ண தொடர் மற்றும் உலகக்கிண்ண தொடரில் ஆப்கானிஸ்தான் அணி சிறப்பாகச் செயல்படும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த சில நாட்களுக்கு முன்னர் இடம்பெற்ற பங்களாதேஷ் அணிக்கு எதிரான ஒருநாள் தொடரை ஆப்கானிஸ்தான் அணி 2-1 என்ற கணக்கில் வென்றிருந்தமை குறிப்பிடத்தக்கது.



# தொண்டைமானாறு செல்வச் சந்நிதி ஆலயத்தின் வருடாந்த மகோற்சவம் குறித்து கலந்துரையாடல்

வடமராட்சி, ஓக. 02

யாழ்ப்பாணம் - தொண்டைமானாறு ஸ்ரீ செல்வச்சந்நிதி முருகன் ஆலயத்தின் வருடாந்த மகோற்சவம் தொடர்பாக இடம்பெற்ற கூட்டத்தில் பல தீர்மானங்கள் எடுக்கப்பட்டுள்ளன.

இது தொடர்பில் வடமராட்சி வடக்கு பிரதேச செயலாளர் ஆழ்வார்ப்பிள்ளை சிறி ஊடகங்களுக்கு அனுப்பி வைத்துள்ள செய்திக் குறிப்பிலேயே இவ்விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

செய்திக் குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

மகோற்சவ காலத்தில் ஆலயச் சூழலில் ஒரு வழிப்பாதை நடைமுறைப்படுத்தப்படும் என்பதுடன் போக்குவரத்து நெருக்கடி ஏற்படுவதனை தடுப்பதற்காக ஆலய பிரதான ஆற்றங்கரை பக்கத்தில் இருக்கின்ற பாதையின் ஊடாக முச்சக்கர வண்டிகள் மற்றும் மோட்டார் சைக்கிள்கள் என்பன வாகன தரிப்பிடத்திற்கு செல்ல முடியும்.

தொண்டைமானாறு ஆற்றில் முதலைகள் நடமாட்டம் காணப்படுவதால் ஆற்றில் இறங்குவதை தவிர்க்க வேண்டும்.

ஆலய பூசைகளின் போது ஆலய சுற்றாடலில் சுகாதார நடைமுறைகளை முறையாக பின்பற்ற தவறும் பட்சத்தில் அல்லது மீறுபவர்கள் மீது சுகாதார நடைமுறைகளின் கீழ் நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

ஆலய தேரோடும் வீதிகளில் நடைபாதை வியாபாரிகளுக்கும் தற்காலிக கடைகளுக்கும் அனுமதி மறுக்கப்பட்டுள்ளதுடன் மீறுவோர் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படும்.

தனியார் காணிகளில் அமைந்திருக்கும் நிரந்தர கடைகளுக்கு அனுமதி வழங்கப்படும் என்பதுடன் புதிய கடைகளுக்கும் மற்றும் வீதியோர கடைகளுக்கும் ஆலய வீதியில் அமைக்கப்படுவதற்கு அனுமதி வழங்கப்படமாட்டாது.

ஆலய மகோற்சவ காலத்தில் உணவு நிலையங்கள் அமைக்கப்பட வேண்டி இருப்பின் அவ் உரிமையாளர் நாட்டின் எப்பாகத்திலாவது உணவு நிலையம் நடாத்திய அனுபவம் மற்றும் மருத்துவ சான்றிதழை கொண்டிருத்தல் வேண்டும்.

உணவு நிலையங்களில் உணவினை கையாள்பவர்கள் மற்றும் அன்னதான மடங்களில் பணிபுரிபவர்கள் என அனைவரும் மருத்துவச்சான்றிதழ் பெற்றிருக்க வேண்டும். உணவு நிலையங்களிற்கான குடிநீர் பொதுச்சுகாதார பரிசோதகரினால் அனுமதிக்கப்பட்ட இடத்தில் இருந்து பெறப்பட வேண்டும்.

ஆலய ஒலிபெருக்கி பாவனை தவிர வேறு ஒலிபெருக்கி பாவனைக்கு தடைவிதிக்கப்பட்டடுள்ளது.

கடை உரிமையாளர்கள் ஒவ்வொரு நாளும் முறையாக கழிவகற்றல் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும். பொருட்களின் நிர்ணயிக்கப்பட்ட விலையினை மீறுவோர் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படும்

தேர்த்திருவிழா அன்று தேர் வீதியுலா வரும் சமயத்தில் எதிர்கொள்ளும் நெருக்கடிகளை தவிர்ப்பதற்காக அந்த நேரத்தில் ஆற்றங்கரை வீதியூடாக வாகனங்கள் உள் நுழைவதற்கு தற்காலிகமாக அனுமதி மறுக்கப்படும். அடியவர்கள் ஆசாரசீலர்களாக ஆலயத்திற்கு வருகைதருமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது. (அ-02)

# புலோலி அறிவகம் சனசமூகநிலைய 68 ஆவது ஆண்டில் குருதிக்கொடை



வடமராட்சி, ஓக. 02

யாழ்ப்பாணம் வடமராட்சி புலோலி வட மேற்கு முருகன் கோவிலடி அறிவகம் சன சமூக நிலையத்தின் 68ஆவது ஆண்டை முன்னிட்டு நேற்று செவ்வாய்க்கிழமை குருதிக் கொடை வழங்கும் நிகழ்வு சிறப்பாக இடம் பெற்றது.

அறிவகம் சன சமூக நிலையத்தின் தலைவர் தங்கராசா அரவிந்தன் தலைமையில் இடம்பெறும் இந் நிகழ்வில் கரவெட்டி பிரதேச வைத்தியசாலையின் மருத்துவர் குழு குருதியை பெற்றுக் கொண்டனர்

இதில் அறிவகம் சன சமூக நிர்வாகத்தினர், கிராம மக்கள், மற்றும் அயல் கிராம மக்கள் ஆர்வத்துடன் குருதி கொடை அளித்தனர். (அ-02)

# ஐ.தே.கவை பெரமுனவினர் ஏற்றுக்கொள்ள மாட்டார்கள்

## கூறுகின்றார் திஸ்ஸ அத்தநாயக்க



நிகழ்வொன்றில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவித்த போதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

ஐக்கிய தேசியக் கட்சிக்கு

கொழும்பு, ஓக. 02

**எதிர்வரும் காலங்களில் ஐக்கிய தேசியக் கட்சி நிச்சயமாக தோல்வியடையும் என்பதால் அவர்களை மொட்டுக் கட்சியினர் கூட ஏற்றுக் கொள்ளமாட்டார்கள் என பாராளுமன்ற உறுப்பினர் திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்தார்.**

நாட்டின் அதிகாரத்தை ஒப்படைக்கும் அளவுக்கு, மக்கள் ஆணை இன்னமும் கிடைக்கவில்லை.

மக்கள் அமைதியாக இருக்கிறார்கள் என்பது உண்மைதான். ஆனால், அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் ஐக்கிய மக்கள் சக்தியை மக்கள் நிச்சயமாக வெற்றியடையச் செய்வார்கள்.

ஐக்கிய மக்கள் சக்தி தலைமையிலான கூட்டணி வெற்றி பெறும் என்பதில் சந்தேகம் இல்லை.

எனவே, ஐக்கிய தேசியக் கட்சி நிச்சயமாக தோல்வியடையும்.

அவர்களை மொட்டுக் கட்சியினர்கூட ஏற்றுக் கொள்ள மாட்டார்கள்-என்றார். (அ)

# நாட்டில் செயற்பாடுகளை ஆரம்பிக்கிறது சினோபெக்!

கொழும்பு, ஓக. 02

சினோபெக் நிறுவனத்தின் முதலாவது எரிபொருள் தொகுதி இறக்கும் பணி ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக அமைச்சர் காஞ்சன விஜேசேகர தெரிவித்தார்.

இதேவேளை இரண்டாவது எரிபொருள் தொகுதி இன்று வரவுள்ளதாக மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகர கூறினார்.

உள்நாட்டு சந்தையில் புதிய சில்லறை விற்பனையாளர்களின் நுழைவு பெற்றோலியப் பொருட்களுக்கான அந்நியச் செலாவணி தேவைகளை எளிதாக்கும் என்று எரிசக்தி அமைச்சர் கூறினார்.

எரிபொருள் நிரப்பு நிலைய விநியோகஸ்தர்களுடனான உடன்படிக்கைகள் கைச்சாத்திடப்பட்டு இறுதி செய்யப்பட்டதன் பின்னர் நாடளாவிய ரீதியில் 150 எரிபொருள் நிலையங்களுடன் செயற்பாடுகளை சினோபெக் ஆரம்பிக்க திட்டமிட்டுள்ளது. (அ)

# வவுனியாவில் வீட்டுக்கு தீ; ஐவர் பொலிஸாரால் கைது!

வவுனியா, ஓக. 02

வவுனியா, தோணிக்கல் பகுதியில் பிறந்தநாள் நிகழ்வு நடைபெற்றுக்கொண்டிருந்த வீட்டுக்கு தீ வைத்த சம்பவம் தொடர்பாக சந்தேகத்தின் அடிப்படையில் ஐவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

குறித்த சந்தேக நபர்கள் நேற்று முன் தினம் மாலை கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பிரிவு அறிவித்துள்ளது.

வவுனியா பொலிஸ் நிலைய அதிகாரிகள் மற்றும் வவுனியா பிரிவு குற்றப்புலனாய்வுத் திணைக்கள அதிகாரிகள் திடீர் சுற்றிவளைப்பை மேற்கொண்டு குற்றச்செயல்களுக்கு உதவிய 3 மோட்டார் சைக்கிள்களுடன் சந்தேக நபர்களை கைது செய்துள்ளனர்.

வவுனியாவைச் சேர்ந்த 24, 27, 31 மற்றும் 34 வயதுடையவர்களே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர் என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சந்தேகநபர்கள் மேலதிக விசாரணைகளுக்காக குற்றப் புலனாய்வுப் பிரிவினரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த ஜூலை மாதம் 23ஆம் திகதி பிறந்தநாள் நிகழ்வொன்று நடைபெற்ற வீட்டுக்குள் புகுந்த இனந்தெரியாத நபர்கள் கூரிய ஆயுதத்தால் அங்கிருந்தவர்களை தாக்கி, குறித்த வீட்டையும் தீவைத்து எரித்திருந்தனர்.

இதன்போது, வீட்டில் இருந்த 10 பேர் தீக்காயங்களுக்கு உள்ளான நிலையில், வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட இளம் தம்பதியினர் உயிரிழந்தனர்.

சம்பவத்தில் காயமடைந்த 2 வயதுடைய ஆண் குழந்தையும், 7 மற்றும் 13 வயதுடைய பெண் பிள்ளைகளும், 19 முதல் 41 வயதுக்கு இடைப்பட்ட 4 பெண்களும், 42 வயதுடைய ஆண் ஒருவரும் வவுனியா வைத்தியசாலையில் தொடர்ந்தும் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

வீட்டுக்கு தீ வைப்பதற்கும் குடியிருப்பாளர்களைத் தாக்குவதற்கும் முகமூடி அணிந்த குழுவொன்று வரும் சிசிரிவி காட்சிகள் பொலிஸாருக்கு கிடைத்துள்ளதுடன், விசாரணைகளின் மூலம் சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இந்த சம்பவம் தொடர்பாக வவுனியா பொலிஸார் தொடர்ந்தும் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (அ)



# வட்டவளை விபத்து; 12 பயணிகள் காயம்!

கொழும்பு, ஓக. 02

கொழும்பில் இருந்து நுவரெலியா நோக்கி பயணித்த இலங்கை போக்குவரத்து சபைக்கு சொந்தமான பஸ் வட்டவளை பகுதியில் விபத்துக்குள்ளாகியுள்ளது.

நேற்று செவ்வாய்க்கிழமை அதிகாலை 04.30 மணியளவில் இவ் விபத்து இடம்பெற்றுள்ளதாக வட்டவளை பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த பஸ்ஸில் 100 பேர் வரை பயணித்துள்ளதுடன் விபத்தில் 18 பேர் காயமடைந்த நிலையில் வட்டவளை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

மேலும் சிலர் மேலதிக சிகிச்சைக்காக நாவலப்பிட்டி வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளனர்.

விபத்து தொடர்பில் வட்டவளை பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (அ)

## அஸ்வெசும...

ஷெஹான் சேமசிங்க மக்களிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

அஸ்வெசும கணக்கை திறப்பதற்காக மக்கள் வங்கி மற்றும் இலங்கை வங்கிகளின் பல கிளைகள் நேற்றும் திறக்கப்பட்டிருந்தன.

பயனாளிகளை தெரிவு செய்யும் நடைமுறையில் ஏற்பட்ட பிரச்சினைகள் காரணமாக மேன்முறையீடுகள் கோரப்பட்டதுடன், அவை மறுபரிசீலனை செய்யப்பட்டு தெரிவு செய்யப்பட்ட குடும்பங்களுக்கு கடந்த நாட்களில் கடிதங்கள் அனுப்பப்பட்டன.

அதற்கமைய, பிரதேச செயலகங் களூடாக வழங்கப்படுகின்ற கடிதங் களை பெற்றுக்கொண்டு தெரிவு செய்யப்பட்டுள்ள 4 அரச வங்கிகளில் ஏதேனும் ஒன்றில் கணக்குகளை திறக்க வேண்டும்.

அஸ்வெசும தொடர்பில் சமர்ப்பிக்கப்பட்டுள்ள மேன்முறையீடுகள் மற்றும் ஆட்சேபனைகளை பரிசீலிக்கும் நடவடிக்கைகள் துரித கதியில் இடம்பெற்று வருவதாகவும், அது நிறைவடைந்தவுடன் புதிய விண்ணப்பங்களை ஏற்றுக் கொள்ளும் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்படும் எனவும் இராஜாங்க அமைச்சர் ஷெஹான் சேமசிங்க குறிப்பிட்டார். (அ)

## சுற்றுலாத்துறை...

வருகை தரமாட்டார்கள். இறந்த நகரங்களுக்கு சுற்றுலாப் பயணிகள் வருவதில்லை. எனவே, நமது கடற்கரைகளை இரசிக்க வேண்டுமெனில் சுற்றுலாப் பயணிகள், இரவு முழுவதும் கடற்கரையில் தங்க வாய்ப்பளிக்க வேண்டும். அதற்கான சட்டங்கள் இயற்றப்பட வேண்டும் என சுற்றுலாத்துறை இராஜாங்க அமைச்சர் டயானா கமகே தெரிவித்துள்ளார்.

இதன் மூலம் சுமார் 800 மில்லியன் அமெரிக்க டொலர் வருமானத்தைப் பெற முடிந்துள்ளதாக அவர் கூறினார்.

ஜனாதிபதி ஊடக மையத்தில் நேற்று நடைபெற்ற ஊடக மாநாட்டில் கருத்துத் தெரிவிக்கும்போதே இராஜாங்க அமைச்சர் டயானா கமகே இதனை தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

சுற்றுலாத்துறையை ஊக்குவிப்பதன் மூலம் நாட்டின் பொருளாதாரத்தைக் கட்டியெழுப்ப ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க முன்னெடுக்கும் வேலைத் திட்டம் வெற்றியடைந்துள்ளதுடன் அந்நியச் செலாவணியை அதிகரிக்க உதவியுள்ளது.

கடந்த வருடம் இந்நாட்டில் நிலவிய பொருளாதார நெருக்கடி காரணமாக உள்நாட்டு வர்த்தகங்கள் மாத்திரமன்றி சுற்றுலாத்துறையும் வீழ்ச்சியடைந்தது. ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பதவியேற்றதன் பின்னர் முன்னெடுக்கப்பட்ட பல்வேறு திட்டங்களால் சுற்றுலாத்துறை வளர்ச்சி அடைந்து வருகிறது.

இவ்வருடம் இதுவரை சுமார் 763000 சுற்றுலாப் பயணிகள் இலங்கைக்கு வருகை தந்துள்ளனர். அது சென்ற வருடத்துடன் ஒப்பிடுகையில் நூற்றுக்கு 205 சதவீத வளர்ச்சியாகும்.

மது நாட்டுக்கு அந்நியச் செலாவணி கிடைக்கும் பிரதான வழிமுறைகளில் ஒன்றாக சுற்றுலாத்துறை காணப்படுவதால் அதனை மேலும் மேம்படுத்தவதே எமது நோக்கம்.

அண்மையில் இலங்கையில் நடைபெற்ற "மிஸ் வேல்ட் டுவரிஸம்" நிகழ்ச்சி, தனியார் துறையினரால் நடத்தப்பட்டாலும் இராஜாங்க அமைச்சு என்ற வகையில் நாம் அதற்கு ஆதரவு வழங்கினோம். அதில் 30 நாடுகள் கலந்துகொண்டதுடன், அதில் பங்கேற்க வருகை தந்திருந்தவர்கள் இலங்கையை சுற்றிப்பார்த்ததுடன் அதன் மூலம் அவர்களின் சமூக வலைத்தளங்கள் ஊடாக இலங்கையின் சுற்றுலாத் தலங்கள் தொடர்பில் அவர்கள் பகிர்ந்து கொள்கின்ற விடயங்கள் காரணமாக அந்த நாடுகளில் எமது நாடு பிரபல்யப் படுத்தப்படுகின்றது-என்றார். (அ)

## தமிழ்...

இறுதி முடிவு எடுக்க முடியும். இது பழுத்த அரசியல்வாதி சம்பந்தனுக்குத் தெரியும். அவர் கூறும் வெளியக சுயநிர்ணய உரிமை என்னவென்று எனக்குப் புரியவில்லை.

இறுதியாக நடைபெற்ற சர்வகட்சிக் கூட்டத்தில் சம்பந்தன் தீர்வு தொடர்பான தமது நிலைப்பாட்டை எடுத்துரைத்துள்ளார். அது தொடர்பில் நான் கவனம் செலுத்துவேன். அதிகாரப் பகிர்வு தொடர்பில் கட்சிகளுடனான பேச்சுத் தொடரும். அது தொடர்பில் பாராளுமன்றம் முடிவுகளை எடுக்கும்-என்றார். (அ)

## எந்தத்...

மீண்டும் ஒரு முறை வெல்ல முடியாது என்று பலர் கூறினர். கடந்த ஆண்டு நாங்கள் தாக்கப்பட்ட பிறகு பலரது எண்ணம் இதுதான்.

எவ்வாறாயினும் 70 வீதத்திற்கும் அதிகமான வாக்காளர்களில் எம்மால் எம்மை மறுசீரமைக்க முடிந்துள்ளது.

குருநாகல் மாவட்டத்தில் 200,000 இற்கும் அதிகமான பெரும்பான்மை வாக்குகளைப் பெற்று பெரமுன வெற்றி பெறும். முன்னாள் ஜனாதிபதி மஹிந்த அதிகளவான விருப்பு வாக்குகளைப் பதிவு செய்வார். குறைந்தது 11 பெரமுன உறுப்பினர்கள் குருநாகல் மாவட்டத்திலிருந்து பாராளுமன்றம் செல்வார்கள் - என்றார். (அ)

## 13ஐ நடைமுறை...

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும் இந்திய தூதுவருக்குமிடையிலான சந்திப்பு நேற்று கொழும்பிலுள்ள இந்தியன் இல்லத்தில் நடைபெற்றது.

இந்திய தூதுவர் கோபால் பாக்லே, பிரதித் தூதுவர், அரசியல் விவகாரங்களுக்கான செயலாளர் உள்ளிட்டவர்கள் இதில் பங்கேற்றனர்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தரப்பில் செல்வம் அடைக்கலநாதன், கோவிந்தன் கருணாகரம் ஆகியோரும், இலங்கை தமிழ் அரசுக் கட்சியின் தரப்பில் இரா.சம்பந்தன், எம்.ஏ.சுமந்திரன், சி.சிறிதரன், சாள்ஸ் நிர்மலநாதன், த.கலையரசன் ஆகியோரும் பங்கேற்றர்.

இதன்போது, ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அண்மையில் இந்தியாவுக்கு அழைக்கப்பட்டபோது, என்னென்ன விடயங்கள் இந்திய தரப்பினால் அறிவுறுத்தப்பட்டது என்பது குறித்து இந்திய தூதர் விளக்கமளித்தார்.

இரு நாட்டுக்குமிடையில் பாலம் அமைப்பது, மின்சக்தி இணைப்பு உள்ளிட்ட பொருளாதாரம் சார்ந்த விடயங்கள் பேசப்பட்டதாகவும், 13ஆவது திருத்தத்தை உடனடியாக நடைமுறைப்படுத்தி, மாகாணசபைத் தேர்தலை நடத்துமாறு அறிவுறுத்தியதாகவும் தூதர் குறிப்பிட்டார்.

இரண்டு கட்சிகளும் எப்படியான தீர்வை எதிர்பார்க்கிறீர்கள் என தூதுவர் அவர்களிடம் கேட்டார்.

13ஆவது திருத்தத்தை இறுதி இலக்காகக் கொள்ளவில்லையென்றும், சமஷ்டி அடிப்படையிலான தீர்வைப் பெற விரும்புவதாகவும் அவர்கள் குறிப்பிட்டனர்.

இதேவேளை, திருகோணமலை மாவட்டத்தை தாம் அபிவிருத்தி செய்யவுள்ளதாக இந்திய தூதர் குறிப்பிட்டார். துறைமுகம், சக்தி, முதலீட்டு வலயம் ஆகியவற்றில் இந்தியா பங்களிக்கவுள்ளதாக அவர் தெரிவித்தார்.

இந்தச் சந்திப்பில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அண்மையில் இந்தியாவுக்கு அழைக்கப்பட்டபோது, என்னென்ன விடயங்கள் இந்தியத் தரப்பினால் அறிவுறுத்தப்பட்டது என்பது குறித்து இந்தியத் தூதுவர் விளக்கமளித்தார். அத்துடன் இலங்கை - இந்தியக் கூட்டறிக்கையையும் கூட்டமைப்பின் எம்.பிக்களிடம் இந்தியத் தூதுவர் கையளித்தார். (அ)

# மதுப் போத்தல்களை அடையாளம் காண செயலியை அறிமுகப்படுத்த அறிவுறுத்தல்

கொழும்பு, ஓக. 02

போலியான பாதுகாப்பு ஸ்ரிக்கர்கள் ஒட்டப்பட்ட மதுபானப் போத்தல்களை அடையாளம் காண்பதற்குப் புதிய செயலியொன்றை உடனடியாக தயாரிக்குமாறு மதுவரித் திணைக்களத்திற்கு வழிவகைகள் தொடர்பான குழு அறிவுறுத்தியுள்ளது.

கடந்த 24 ஆம் திகதி மதுவரித் திணைக்களத்துக்கு கள விஜயமொன்றினை மேற்கொண்டிருந்தபோதே வழிவகைகள் தொடர்பான குழுவின் தலைவர் பாராளுமன்ற உறுப்பினர் பாட்டாளி சம்பிக்க ரணவக்க இவ்வாறு அறிவுறுத்தல் விடுத்துள்ளார்.

போலியான பொருட்களின் விநியோகத்தினை கட்டுப்படுத்தும் வகையிலே மதுபான போத்தல்களுக்கு பாதுகாப்பு ஸ்ரிக்கர் அறிமுகப்படுத்தப்பட்ட போதும், சந்தையில்க் போலியான பாதுகாப்பு ஸ்ரிக்கர் பயன்படுத்தப்பட்டு வருவதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இந்த நிலையிலே, போலியான ஸ்ரிக்கர்களை அடையாளம் காண்பதற்கான முறைமையொன்று திணைக்களத்திடம் இல்லையென்பது கண்டறியப்பட்டுள்ளது.

இதனைத் தொடர்ந்து கடந்த வரவு - செலவுத் திட்டத்தில் வரி அதிகரிப்பு உள்ளிட்ட பல்வேறு காரணிகளால் மதுபானம் ஊடாகக் கிடைக்கப்பெற்ற வருமானம் வீழ்ச்சி கண்டிருப்பதாக திணைக்களத்தின் அதிகாரிகள் சுட்டிக் காட்டியுள்ள நிலையில், மதுபானங்களுக்கான விலையை அதிகரிக்கும் முன்னர் கேள்விக்கான நெகிழ்ச்சி கணிக்கப்படவேண்டியதன் அவசியம் குறித்து குழுவின் உறுப்பினர்கள் வலியுறுத்தியுள்ளனர்.

## உபில்லியன்...

உள்ளதாக அமைச்சு தெரிவித்துள்ளது.

இது குறித்து சுகாதார அமைச்சின் செயலாளர் ஜனக ஸ்ரீ சந்திரகுப்தா தெரிவிக்கையில் -

தற்போதுள்ள கேள்வி கோரல் நடைமுறைகளின் கீழ் இந்த மருந்துகளை வாங்குவதற்கு குறைந்தது நான்கரை மாதங்கள் ஆகும்.

இருப்பினும் தற்போதுள்ள அவசர நிலைமையை கருத்தில் கொண்டு இது சாத்தியமில்லை. அவசரகால கொள்முதலின் கீழ் கொள்வனவு செய்தால் ஒன்றரை மாதங்களில் மருந்துகள் கிடைக்கும்.

மேலும் எந்தெந்த மருந்துகள் மற்றும் மருத்துவ உபகரணங்கள் குறைவாக உள்ளன என்பதைக் கணக்கிடுவது அதிகாரிகளுக்குக் கடினமாக உள்ளது-என்றார். (அ)

## இந்திய...

மேற்கொள்ளப்பட்டுள்ளன.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் இந்தியப் பயணத்தைத் தொடர்ந்து, மேம்படுத்தப்பட்ட புவியியல் மற்றும் வர்த்தக இணைப்புகள் தொடர்பில் கலந்துரையாடப்பட்ட விடயங்களுக்கு அமைவாக, இந்திய தொழில்கள் கூட்டமைப்பு மற்றும் விவேகானந்தா சர்வதேச அறக்கட்டளையின் பலதுறை பிரதிநிதிகள், மரபுசார் போன்ற துறைகளில் நிபுணர்கள் மற்றும் தொழில்துறை தலைவர்களை உள்ளடக்கிய குழுவே வருகை தந்துள்ளது.

புதுப்பிக்கத்தக்க எரிசக்தி, தளபாடங்கள் மற்றும் உள்கட்டமைப்பு கப்பல் போக்குவரத்து, நீர் மேலாண்மை, தகவல் தொழில்நுட்பம், சுற்றுலா மற்றும் விவசாயம் ஆகியனவற்றில் முதலீடு செய்வதற்கான சாத்தியக்கூறுகளை இந்தக் குழு ஆராய்ந்துள்ளது.

இந்திய முதலீட்டாளர்கள் மற்றும் வர்த்தக நிறுவனங்களுடனான நெருக்கமான ஒத்துழைப்பு இலங்கை பொருளாதார நெருக்கடியிலிருந்து விரைவாக மீள உதவும் அதேவேளையில் பகிரப்பட்ட செழிப்பை உறுதி செய்யும் என ஆளுநர் திருமதி பி.எஸ்.எம்.சார்ள்ஸ் குறிப்பிட்டார்.

கைத்தொழில், நகர அபிவிருத்தி அதிகார சபை, முதலீட்டு சபை, கூட்டுறவு, பாற் பண்ணை மற்றும் கால்நடை பராமரிப்பு ஆகிய திணைக்களங்களின் அதிகாரிகள் நேற்றுமுன்தினம் நடைபெற்ற கலந்துரையாடலில் கலந்து கொண்டனர்.

வடக்கு மாகாணத்துக்கான தமது 3 நாள் பயணத்தின் போது சம்பந்தப்பட்ட முதலீட்டுத் தளங்களையும் பார்வையிடும் அதேவேளை, வடக்கு மாகாணத்தைச் சேர்ந்த வர்த்தகர்களைச் சந்திப்பதற்கும் தூதுக்குழு திட்டமிட்டுள்ளது. (அ)

## தமிழர்களின்...

இந்தியாவுக்கு செல்லும் பயணத்தை அதிகரிப்பதற்காக தரைப்பாலங்கள், பாலங்கள், குழாய்கள், மின்சாரம் கடத்தும் பாதைகள் மற்றும் தரையிறங்கும் உட்கட்டமைப்புகளை உருவாக்க வேண்டும் என்றும் மிலிந்த மொரகொட கூறினார்.

இந்தியாவுக்கும் அதன் அண்டை தீவுக்கும் இடையிலான உறவுகளை வளர்ப்பதற்கு நில இணைப்பு அவசியம் எனவும் மிலிந்த மொரகொட குறிப்பிட்டார். (அ)

## 13 குறித்து...

அதிகாரத்தை தவிர்த்து ஏனைய அதிகாரங்களை அமுல்படுத்த ஜனாதிபதி இணக்கம் வெளியிட்டிருந்தார்.

என்றாலும், ஜனாதிபதியின் இந்த கருத்துகளை தமிழ்க் கட்சிகள் நிராகரித்திருந்தன.

நேற்று இந்திய தூதுவரை சந்தித்த தமிழ்ப் பாராளுமன்ற உறுப்பினர்களிடம் 13ஆவது திருத்தச்சட்டத்தை அமுல்படுத்தும் மற்றும் மாகாண சபைத் தேர்தலை நடத்தவேண்டுமென்ற இந்தியாவின் நிலைபாட்டில் எவ்வித மாற்றமும் இல்லையென தூதுவர் கோபால் பக்லே உறுதியளித்துள்ளார்.

இந்நிலையில் ஜனாதிபதியின் இந்த உரைக்கு பொதுஜன பெரமுன கடும் எதிர்ப்பை வெளியிட்டுள்ளது.

13ஆவது அரசியலமைப்புத் திருத்தம் குறித்தும், பாராளுமன்றத்தில் விசேட உரையை ஆற்றவுள்ள ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க எம்முடன் இதுபற்றி எவ்வித கலந்துரையாடல்களையும் நடத்தவில்லையென ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் பொதுச் செயலாளர் சாகர காரியவசம் தெரிவித்தார்.

நாட்டு மக்கள் பொருளாதார நெருக்கடியில் சிக்கித் தவித்துவரும் நிலையில், வாழ்க்கைச் செலவு தாங்க முடியாத அளவுக்கு உயர்ந்துள்ளது. வாழ்க்கைச் செலவை குறைப்பதற்கு ஜனாதிபதி எடுக்கும் எந்தவொரு தீர்மானத்திற்கும் ஆளுங்கட்சி ஆதரவளிக்கும் என்றும் அவர் கூறினார்.

மக்களை குழப்பத்துக்கு உள்ளாக்கும் வகையில் 13ஆவது அரசியலமைப்பு திருத்தம் குறித்து பேசப்படுகிறது. இவ்வாறு பேசுவதால் பிரச்னைகள் மேலும் உக்கிரமடையும் என ஆரம்பத்திலேயே கட்சி என்ற ரீதியில் ஜனாதிபதியிடம் கூறியுள்ளோம் என்றும் அவர் கூறினார்.

அதிகாரப் பகிர்வுக்கு தமது கட்சி எந்த வகையிலும் எதிரானது அல்ல. ஆனால், அது இனம், மதம் ஆகியவற்றின் அடிப்படையில் இருக்கக் கூடாது. உள்ளூராட்சி மட்டத்திலோ அல்லது அதற்கு அப்பாலும் நாடு முழுவதிலும் பரந்த அதிகாரப் பகிர்வாக இருக்க வேண்டும் எனவும் அவர் வலியுறுத்தினார்.

எவ்வாறாயினும் அதிகாரப் பகிர்வு தொடர்பில் ஜனாதிபதி அடுத்த வாரம் பாராளுமன்றத்தில் விசேட உரையொன்றை ஆற்ற உள்ளார் என அரச தரப்பு செய்திகள் தெரிவிக்கின்றன. (அ)

ஈழநாடு
Eelanadu ඊළනාඩු

# யாழில் 3 பிள்ளைகளின் தாய் தொடர் காய்ச்சலால் மரணம்!

யாழ்ப்பாணம், ஒக. 02

யாழ்ப்பாணத்தில் தொடர் காய்ச்சலினால் பீடிக்கப்பட்டிருந்த பெண்ணொருவர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார். யாழ்ப்பாணம், உரும்பிராய் தெற்கைச் சேர்ந்த மூன்று பிள்ளைகளின் தாயான சுகந்தன் ஜான்சி (வயது-46) என்ற பெண்ணே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

குறித்த பெண் கடந்த சில தினங்களாக காய்ச்சலினால் பீடிக்கப்பட்ட நிலையில், தனியார் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்துள்ளார்.

காய்ச்சலின் தீவிரத் தன்மை அதிகரித்தமையால் யாழ்.போதனா வைத்தியசாலையில் நேற்று முன் தினம் திங்கட்கிழமை அனுமதிக்கப்பட்ட நிலையில் ,அங்கு சிகிச்சை பலனின்றி அவர் உயிரிழந்துள்ளார். (அ)

# தற்காலிகமாக மூடப்பட்ட வவுனியா சிறைச்சாலை!

வவுனியா, ஒக. 02

அம்மை நோயினால் பாதிக்கப்பட்ட 04 கைதிகள் அடையாளம் காணப்பட்டமையினால் கடந்த 25 ஆம் திகதி முதல் வவுனியா சிறைச்சாலை தற்காலிகமாக மூடப்பட்டுள்ளது.



கைதிகளை உறவினர்கள் சந்திக்கும் நடவடிக்கை மற்றும் வழக்குச் செயற்பாடுகளுக்காக கைதிகளை நீதி மன்றத்துக்கு அழைத்துச் செல்லும் நடவடிக்கை ஆகியன இடைநிறுத்தப்பட்டுள்ளதாக சிறைச்சாலைகள் ஊடகப் பேச்சாளரும் சிறைச்சாலைகள் நிர்வாக ஆணையாளருமான சந்தன ஏக்கநாயக்க தெரிவித்தார்.

எதிர்வரும் 08 ஆம் திகதி வரை சிறைச்சாலை மூடப்பட்டிருக்கும் என சிறைச்சாலைகள் ஊடகப் பேச்சாளர் கூறினார்.

வவுனியா சிறைச்சாலையில் 400 இற்கும் மேற்பட்ட கைதிகள் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். (அ)

# பஸ் கட்டணத்தில் மாற்றம் இல்லை

கொழும்பு, ஒக. 02

பெற்றோல் விலை அதிகரிப்பானது, மக்கள் மாற்று வாகனங்களைப் பயன்படுத்துவதைத் தவிர்க்கும் சூழலை ஏற்படுத்தும் என இலங்கை தனியார் பஸ் உரிமையாளர் சங்கம் தெரிவித்துள்ளது.

அத்துடன், டீசல் விலை குறைக்கப்பட்டுள்ளபோதிலும், தற்போதைய பஸ் பயணக் கட்டணத்தில் மாற்றம் ஏற்படுத்தப்படமாட்டாது எனவும் அதன் தலைவர் கெமுனு விஜேரட்ன தெரிவித்தார். (அ)

# சிறைக் கைதிகளின் எண்ணிக்கை உயர்வு

கொழும்பு, ஒக. 02

இலங்கையில் உள்ள சிறைச்சாலைகளில் கைதிகளின் எண்ணிக்கை அதிகரித்துள்ளதாக சிறைச்சாலைகள் திணைக்களம் அறிவித்துள்ளது.

இந்த வருடம் ஆரம்பம் முதல் பல்வேறு குற்றச்சாட்டுகளின் அடிப்படையில் தண்டனை விதிக்கப்பட்ட நிலையில், கைதிகளின் எண்ணிக்கை வெகுவாக அதிகரித்துள்ளது என திணைக்களம் மேலும் குறிப்பிட்டுள்ளது.

இதன்படி, நாட்டில் உள்ள அனைத்து சிறைச்சாலைகளிலும் 13,241 கைதிகள் முன்னதாக சிறை வைக்கப்பட்டிருந்த நிலையில், தற்போது குறித்த எண்ணிக்கை சுமார் 29,000 எட்டியுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கமைய, சுமார் 19 ஆயிரம் கைதிகள் சந்தேகத்தின் அடிப்படையிலும், 10 ஆயிரம் கைதிகள் தண்டனை அடிப்படையிலும் சிறை வைக்கப்பட்டுள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

இதனால் நாட்டிலுள்ள அனைத்து சிறைச்சாலைகளிலும் நெரிசல் அதிகரித்து வருவதாக சிறைச்சாலைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது. (அ)

# 74 ஆண்டுகள் ஆட்சி செய்தவர்கள் நாட்டை சீரழித்தனர் என்பது தவறு!

## மைத்திரிபால சிறிசேன சுட்டிக்காட்டு

கொழும்பு, ஒக. 02



**சுதந்திரத்திற்கு பின்னர் நாட்டை 74 ஆண்டுகள் ஆட்சி செய்த அரசாங்கங்கள் நாட்டை சீரழித்துள்ளதாக கூறுவது தவறு என முன்னாள் ஜனாதிபதியும் சுதந்திரக்கட்சியின் தலைவருமான மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.**

**அம்பாலங்கொடை மீட்டியாகொடை பிரதேசத்தில் நடைபெற்ற ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் அதிகார சபைக்கூட்டத்தில் உரையாற்றும் போதே அவர் இதனை கூறினார்.**

அவர் மேலும் தெரிவிக்கையில்- கடந்த 2010 ஆம் ஆண்டு மகிந்த ராஜபக்ஷவின் கோரிக்கைக்கு அமைய நான் கட்சியின் செயற்பாட்டாளர்களைச் சந்திக்க காலிக்கு சென்றேன். அப்பேது எமது கட்சியின் வேட்பாளர்களை மக்கள் விமர்சித்தனர்.

இதனை என்னுடன் சம்பந்தப்படுத்தவேண்டாம் எனக்கூறி அன்று நான் தப்பித்துச் சென்றேன். தற்போது உலகம் மாறி விட்டது. அதேபோல் அனைத்துத் துறைகளும் மாற்றமடைந்துள்ளன.

புதிய உலகத்தை உருவாக்கக் கூடிய அறிவாளிகள் தற்போது எமது நாட்டில் இருக்கின்றனர்.

அதில் ஒரு பகுதியினர் வெளிநாடுகளுக்கு சென்றுள்ளனர். எனினும் மேலும் பலர் நாட்டில் இருக்கின்றனர்.

கடந்த வருடம் நடைபெற்ற போராட்டத்தில் தொழிலாளிகள் முதல் செல்வந்தர்கள் வரை கலந்து கொண்டனர். எவரும் கற்றுக் கொள்ளவேண்டிய பாடங்கள் இருந்தன.

எமது நாடு மூன்று நாட்கள் தலைவர ஒருவர் இல்லாமல் இருந்தது. இதனை மக்கள் அமைதியாக பார்த்துக்கொண்டிருந்தனர்.

மக்களின் பொருளாதார நெருக்கடி பாரதூரமானது. அன்று 50 நோயாளிகளுக்கு சிகிச்சையளித்த மருத்துவர் ஒருவருக்கு தற்போது 250 நோயாளிகளுக்கு சிகிச்சையளிக்க வேண்டிய நிலைமையேற்பட்டுள்ளது.

கல்வி, மீன்பிடி தொழில், உட்கட்டமைப்பு வசதிகள் வீழ்ச்சியடைந்துள்ளன. நிர்மாணிப்புகள் நின்று போயுள்ளன.

வீதிகள் நிர்மாணிக்கப்படுவது கைவிடப்பட்டுள்ளது. இதுதான் நிலைமை.

தற்போது பதவியில் இருக்கும் ஜனாதிபதிக்கும் எமக்கும் இடையில் கொள்கை ரீதியான பிரச்னையே உள்ளது.

திறந்த பொருளாதாரம் சிறந்தது, எனினும் நாம் அதில் இருக்கும் கெடுதியான விடயங்களை எடுத்துக்கொண்டுள்ளோம்.

74 ஆண்டுகள் நாட்டை ஆட்சி செய்தவர்கள் நாட்டை சீரழித்தனர் என்பது தவறான கருத்து.

டி.எஸ்.சேனாநாயக்க, சிறிமாவோ பண்டாரநாயக்க, டட்லி சேனாநாயக்க, ஜோன் கொத்தலாவல போன்ற ஆட்சியாளர்கள் ஊழல், மோசடிகளுக்கு இடமளிக்கவில்லை - என்றார். (அ)

# வடக்கு ரயில் சேவை மட்டுப்பாடு அரசியல் காரணம் இல்லையாம்!

## அமைச்சர் பந்துல கூறுகிறார்

கொழும்பு, ஒக. 02

"ரயில் பாதை புனரமைப்புக்கு முன்னர் வடக்குக்கு இடம்பெற்ற ரயில் சேவைகள் சில நிறுத்தப்பட்டுள்ளமைக்கு அரசியல் ரீதியான காரணம் எதுவுமில்லை. பழைய சேவைகளை நிறுத்தி புதிய சேவைகளை ஆரம்பித்துள்ளோம்."

- இவ்வாறு போக்குவரத்து அமைச்சர் பந்துல குணவர்த்தன தெரிவித்துள்ளார்.

ரயில் பாதை புனரமைப்புக்கு முன்னர் கல்கிஸையிலிருந்து தினமும் காலை 5.15 மணிக்கு புறப்படும் கடுகதி ரயில் (4021) தற்போது சனிக்கிழமைகளில் மாத்திரம் அதே நேரத்தில் சேவையில் ஈடுபடுகின்றது. யாழ்ப்பாணத்திலிருந்து 13.40 மணிக்கு புறப்படும் கடுகதி ரயில் (4022) தற்போது ஞாயிற்றுக்கிழமைகளில் மாத்திரம் சேவையில் ஈடுபடுத்தப்படுகின்றது. முன்னர் இயக்கப்பட்ட சிறிதேவி ரயில் சேவையில் ஈடுபடவில்லை. வார நாட்களில் சேவையில் ஈடுபட்ட கடுகதி ரயில் (4003,4004) இப்போது சேவையில் ஈடுபடவில்லை. வார இறுதி நாள்களில் இரவு 10 மணிக்கு இடம்பெற்ற ரயில் சேவையும் (4091,4092) தற்போது இடம்பெறுவதில்லை. இந்தச் சேவைகள் நிறுத்தப்பட்டுள்ளமையால் வடக்கைச் சேர்ந்தவர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இது தொடர்பில் போக்குவரத்து அமைச்சர் பந்துலவிடம் கேட்டபோது,

"பல மாதங்களுக்குப் பின்னர் கொழும்பிலிருந்து வடக்குக்கான ரயில் சேவை மீண்டும் ஆரம்பித்துள்ளது. கல்கிஸை மற்றும் கோட்டையிலிருந்து காங்கேசன்துறைக்கான ரயில் சேவைகள் நாள்தோறும் சீரான முறையில் இயங்க வேண்டும். அதற்காக பழைய சேவைகளில் சில மட்டுப்படுத்தப்பட்டும் மக்களின் நன்மை கருதி சில புதிய சேவைகளும் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

பழைய சேவைகள் சீராக இயங்கவில்லை என்ற குற்றச்சாட்டை முன்வைக்காமல் ரயில் சேவைகள் முழுமையாக இயங்க அனைவரும் ஒத்துழைக்கவேண்டும். இனிவரும் காலங்களில் பழைய சேவைகளையும் முழுமைப்படுத்தி புதிய சேவைகளையும் முழுமைப்படுத்தி வடக்கு ரயில் மார்க்கத்தில் புதிய அத்தியாயம் தொடங்கும். பழைய சேவைகள் மட்டுப்படுத்தப்பட்டமைக்கு எந்தவித அரசியலும் இல்லை" - என்று பதிலளித்தார். (அ)

# விமானத்துக்கு எரிபொருளை நிரப்பவே கொழும்பு வந்தார் பிரான்ஸ் ஜனாதிபதி

## கூறுகிறார் உதய கம்மன்பில

கொழும்பு, ஒக. 02

விமானத்திற்கு எரிபொருளை நிரப்பவே பிரான்ஸ் ஜனாதிபதி இம்மானுவேல் மக்ரோன் கட்டு நாயக்க விமான நிலையத்துக்கு வந்தார். எனினும் பிரான்ஸ் ஜனாதி பதி ஒருவர் 75 ஆண்டுகளுக்கு பின்னர் இலங்கைக்கு வந்தார் எனக் கூறி பிரசாரம் செய்து வருகின்றனர் என பாராளுமன்ற உறுப்பினர் உதய கம்மன்பில தெரிவித்தார்.

கொழும்பில் ஊடகங்களிடம் கருத்து வெளியிட்டுள்ள கம்மன்பில, பிரான்ஸ் ஜனாதிபதி ஒன்றரை மணி நேரம் மாத்திரமே இலங்கையில் தங்கியிருந்தார்.

தனது விமானத்துக்கு எரிபொருளை நிரப்பவே பிரான்ஸ் ஜனாதிபதி இலங்கையில் தரையிறங்கினார். ஒன்றரை மணி நேரம் மாத்தி ரமே விமான நிலையத்தில் தங்கி யிருந்தார். 75 ஆண்டுகளுக்கு பின் னர் பிரான்ஸ் ஜனாதிபதி ஒருவர் இலங்கை விஜயம் செய்ததாக கூறி பிரசாரம் செய்து, பிரசார பயனை பெற்றனர்.

பிரான்ஸ் ஜனாதிபதியின் இலங்கை விஜயத்தின் மூலம் நாட்டுக்கு கிடைத்த நன்மை என்ன என்பதை முடிந்தால் அரசாங்கம் மக்களுக்கு தெரியப்படுத்த வேண்டும் - என்றார். (அ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 02.08.2023 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.